# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 512 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (03.05.2022) ஹிஜ்ரி - 1443, ஷவ்வால் - 01 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


## 3 நாட்கள் எரிபொருள் வரிசையில் நிற்காதீர்!

## அமைச்சர் காஞ்சன மக்களிடம் வேண்டுகோள்

(யோ.தர்மராஜ்)

நாட்டில் மீண்டும் எரிபொருள் வரிசையை உருவாக்குவதற்கு சில முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதால் எதிர்வரும் மூன்று நாட்களில் எரிபொருள் நிலையங்களில் வரிசைகளில் நிற்க வேண்டாம். ஒரு அடி பின்னால் வந்து இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை...

02 பக்கம்

## யார் பிரதமராக வந்தாலும் எந்த மாற்றமும் ஏற்படாது

### சொல்கிறார் சுமந்திரன் எம்.பி.



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற நிலையில் யார் புதிய பிரதமராக வந்தாலும் நாட்டில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப்போவதில்லை - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்...

02 பக்கம்



எரிபொருள் வரிசை நுகேகொடையில்... (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# தேசிய இணக்க அரசு விரைவில்!

## பிரதமர் நாளை விசேட அறிவிப்பு

## பதவியை துறக்க உடன்பாடு

(யோ.தர்மராஜ்)

நாட்டின் நெருக்கடி நிலைமைக்குத் தீர்வுகாணும் வகையில் இவ்வாரம் அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட இடைக்கால அரசாங்கம் அமைக்கும் செயற்பாடுகள் இழுபறி நிலையிலுள்ளபோதும், அதற்குப் பதிலாக தேசிய இணக்க அரசாங்கத்தை உருவாக்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணக்கம் தெரிவித்துள்ளது.

அதேசமயம், பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன விருப்பம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று (02) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் சுயாதீன குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இடைக்கால அரசாங்கத்திற்குப் பதிலாக தேசிய இணக்க அரசாங்கத்தை உருவாக்குவதற்கு இரு தரப்புக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

நேற்று (02) ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்...

02 பக்கம்

## பொருளாதார நெருக்கடியால் தூக்கில் தொங்கிய விவசாயி

### கல்கமுவவில் துயரம்

(யோ.தர்மராஜ்)

பொருளாதார நெருக்கடியை தாங்கிக்கொள்ள முடியாது 60 வயதுடைய விவசாயி ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

கல்கமுவ - வலஸ்வெவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைவியுடன் சிறிய குடிசையில் வாழ்ந்துவந்த இவர், சேனை விவசாயத்தை மேற்கொண்டு வந்ததுடன், கூலித் தொழிலாளியாகவும் இருந்துள்ளார். உயிரிழந்தவர் பெருந்தோட்ட விவசாயத்தில் ஈடுபட்டுவந்ததுடன், எரிபொருள் மற்றும் உரம் இல்லாதமையினால் அவருடைய விவசாய விளைச்சல்களில்...

02 பக்கம்

## இலங்கைக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்க தமிழக அரசுக்கு இந்திய மத்திய அரசு அனுமதி

### ஸ்டாலினுக்கு ஜெய்ஷங்கர் கடிதம்

11 பக்கம்

## பிறர் குறித்த உணர்வுடன் - தியாக மனப்பாங்குடன் செயற்படுவோம்



### பிரதமர் மஹிந்த ரமழான் பெருநாள் வாழ்த்து

முழு நாடும் சவால்மிக்கதோர் காலகட்டத்திலுள்ள இத்தருணத்தில் சமூகத்திலுள்ள பிறர் குறித்த உணர்வுடன் தியாக மனப்பாங்குடன் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள ரமழான் தின வாழ்த்துச் செய்தியில்...

02 பக்கம்

## நீர்க்கட்டணப் பட்டியல் இனிமேல் குறுஞ்செய்தியில்

நீர்க்கட்டணங்கள் இனிவரும் காலங்களில் இ-பில் அல்லது குறுஞ்செய்தி மூலம் வழங்கப்படும் என நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. தாள் தட்டுப்பாடு..

02 பக்கம்

## சுபீட்ச வாழ்க்கைக்கு வழிவகுக்கும் நாளாக ரமழான் அமையட்டும்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பெருநாள் வாழ்த்து

02 பக்கம்




## இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து தம்மை நீக்க 50 கோடி ரூபா செலவழிப்பு

### அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார் ரொஷான் ரணசிங்க



(யோ.தர்மராஜ்)

தன்னுடைய அண்ணனின் அரசியலுக்கு ரொஷான் ரணசிங்க பெரும் அச்சுறுத்தலாக இருப்பார் என்ற அச்சத்தில், மகாவலி இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து தன்னை நீக்கி 50 கோடி ரூபா கொடுத்து வேறொருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக முன்னாள் மாகாண சபைகள்...

02 பக்கம்






## பா.ஜ.க. தமிழ்நாடு மாநில தலைவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்திப்பு



பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்றைய தினம் சந்தித்தார்.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில்...

02 பக்கம்

## புதிய மின் இணைப்புகள் வழங்குவதில் வரையறை

புதிய மின்சார இணைப்புகள் வழங்குவது வரையறுக்கப்பட்டுள்ளதென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. ரமழான் தினமான இன்று மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படமாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைப் பதவியை ஜனாதிபதி கோட்டாபயவிடம் வழங்க அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஆலோசித்து வருகின்றனர். ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தினர் இதற்கு எதிர்ப்பை வெளியிடுவதாக தகவல். அதனை நாமல் ராஜபக்ஷவிடம் வழங்க யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாம்.

## சிறுவர்களிடையே வைரஸ் காய்ச்சல்

இலங்கையில் கடந்த சில நாட்களாக சிறுவர்கள் மத்தியில் வைரஸ் தொற்று அதிகரித்துள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் காய்ச்சல், சளி, இருமல், நிமோனியா போன்ற நோய்களின் பாதிப்பு அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதனால் சிறுவர்களுக்கு மூச்சு விடுவதில் அதிக சிரமம் ஏற்படுவதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பாதிப்புகள் ஏற்படும்...

02 பக்கம்

## எரிபொருள் தரம் தொடர்பில் தொலைபேசியில் அறிவிக்கலாம்

எரிபொருள் தரம் குறித்து ஏதேனும் சந்தேகம் காணப்படுமாயின் அது தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிப்பதற்காக இரு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

விடயம் தொடர்பாக 011 5234234 மற்றும் 011 5455130 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும்வரை அரசியல்வாதிகளுடன் சந்திப்பில்லை

## மல்வத்து மகாநாயக்க தேரர் அறிவிப்பு



நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வரை எந்த அரசியல்வாதியும் தன்னை சந்திக்க வர வேண்டாம் என மல்வத்து பீட மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை எடுக்குமாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்கர்கள் கடந்த வாரத்தில் யோசனை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்திருந்தனர்.

இந்நிலையில், தன்னை எந்தவொரு அரசியல்வாதியும் சந்திக்க வர வேண்டாம் என மல்வத்து பீட மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரர் நேற்று (02) தெரிவித்துள்ளார்.

### நீர்க்கட்டணப்...

காரணமாக நீர்க் கட்டணம் அச்சிடுவது நிறுத்தப்பட்டுள்ளதாக அச் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்காலத்தில் வாடிக்கையாளர்கள் இ-பில் அல்லது எஸ்.எம்.எஸ் மூலம் நீர்க் கட்டணத்தைப் பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிறுவர்களிடையே...

சிறுவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு வைத்தியர் பெற்றோர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.







எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் நேற்று (02) காணப்பட்டன.

(படப்பிடிப்பு: ஏஷான் தசநாயக்க)

தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01 முதல் 15 வரையிலான பகுதிகளில் தமிழன் (தினசரி, வாரஇதழ்), ஜூனியர் பத்திரிகை வீடுகளுக்கே விநியோகம் செய்யப்படும்.

தொடர்பு - சந்திரகுமார்
0777983308

### தேசிய இணக்க...

போது, 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து தயாரித்த 13 பக்க யோசனையை முன்வைத்துள்ளதுடன், அது குறித்து ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. இதன்போது, இடைக்கால அரசாங்கம் அமைப்பது தொடர்பாக பேசுவதற்கு பதிலாக தேசிய இணக்க அரசாங்கம் அமைப்பது குறித்தே அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தேசிய இணக்க அரசாங்கத்தை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணக்கம் தெரிவித்துள்ளது.

இடைக்கால அரசாங்கம் அமைப்பதற்கு ஏனைய கட்சிகள் இணக்கம் தெரிவிக்காத காரணத்தினால் தற்போதிருக்கும் கட்சிகளை வைத்து அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் அதிலுள்ள பிரதமர் மற்றும் அமைச்சர்கள் வழங்குவது குறித்தும் அடுத்தக்கட்டமாக பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது .

அதேபோன்று, பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன விருப்பம் தெரிவித்துள்ளதுடன், தேசிய சபையின் ஊடாக புதிய பிரதமர் மற்றும் அமைச்சர்களை நியமிப்பது குறித்து ஆராய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த பேச்சுவார்த்தையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்ளவில்லை என்பதோடு, முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்ததுடன், புதிய அரசில் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்காதிருக்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

இதற்கிடையில் நாளை புதன்கிழமை நாடாளுமன்றம் கூடும்போது விசேட அறிவிப்பொன்றை செய்துவிட்டு எதிர்க்கட்சி வரிசையில் அமர பிரதமர் மஹிந்த தலைமையிலான எம்.பிக்கள் முடிவு செய்துள்ளதாக நேற்றிரவு தகவலொன்று தெரிவித்தது.

# தனியார் வைத்தியசாலைகளில் அவசர சத்திர சிகிச்சைகள் மட்டும்

பாரிய மருந்து தட்டுப்பாடு காரணமாக தனியார் வைத்தியசாலைகளில் அவசர சத்திர சிகிச்சைகளை மாத்திரம் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தனியார் வைத்தியசாலை மற்றும் நேர்சிங் ஹோம் சங்கத்தின் தலைவர் கலாநிதி ஆனந்த குருப்பு ஆராச்சி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில்,

நாடளாவிய ரீதியிலுள்ள 200 தனியார் வைத்தியசாலைகளில் 76 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது.

மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் தட்டுப்பாடு குறித்து சுகாதார அமைச்சு மற்றும் தனியார் சுகாதார சேவை ஒழுங்குபடுத்தும் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நாளுக்கு நாள் நாட்டில் அதிகரித்து செல்லும் மருந்துகளுக்கான பற்றாக்குறை காரணமாக அப்பாவி மக்களின் உயிர்கள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் மருந்துகள் மற்றும் வைத்திய உபகரணங்கள் என்பவற்றை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

### யார் பிரதமராக...

நேற்று (02) யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யார் பிரதமராக வந்தால் நாட்டில் மாற்றம் ஏற்படலாம் என நீங்கள் கருதுகிறீர்கள் என ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் தற்பொழுது அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலை காணப்படுகின்றது. பிரதமரை மாற்ற வேண்டும் என்று ஒரு குழு விடாப்பிடியாக நிற்கின்றார்கள். எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளது. அதேபோல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு கோரிக்கையை முன் வைத்துள்ளேன். அதாவது தற்போது பிரதமர் பதவி விலகினால் புதிய ஒருவர் பிரதமராக வருவார். அவருடன் ஒரு புதிய அமைச்சரவை உருவாகும். அந்த அமைச்சரவையை உருவாக்குவதற்கு ஐவர் கொண்ட குழுவினை உருவாக்கியுள்ளார்கள். அந்த ஐவர் கொண்ட குழுவில் உள்ளோர் மீது எமக்கு திருப்தியில்லை. அவ்வாறான நிலையில், பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வருவதன் மூலம் நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

அதற்கு நான் கூறியுள்ளேன், அதாவது ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை ஒரே நாளில் கொண்டு வாருங்கள். ஜனாதிபதி நாட்டின் தலைவர். அவர் அவ்வாறே இருப்பார். அதேபோல, பிரதமர் பதவி விலகினால் இன்னொரு பிரதமர் வருவார். அவருடன் இணைந்து புதிய அமைச்சரவை உருவாகும். அவ்வாறு உருவாகும் அமைச்சரவை தற்போதுள்ள அமைச்சரவையை விட மிகவும் கொடூரமான அமைச்சரவையாக இருக்கும். இருந்தால் எவ்வாறிருக்கும் என ஆழமாக பார்க்கவேண்டும். எனவே நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்து நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி முறையினை ஒழிப்பதன் மூலமே நாட்டில் ஏதாவது மாற்றம் ஏற்படும். மேலும், தற்பொழுது இலங்கையில் உள்ள பொருளாதார நெருக்கடி நிலையைக் கடந்து புலம்பெயர்ந்த தேசத்தில் உள்ள தமது உறவுகள் இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்க முன்வர வேண்டும்.

பிரதமர் பதவிக்கு எவர் வந்தாலும் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. அதோடு நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு கூட்டமைப்புக்கு எதிரான வாக்களிக்க வேண்டிய நிலையில் உள்ளோம். எனினும், அந்த விடயம் தொடர்பில் நாங்கள் அனைத்து கட்சிகளுடனும் ஆராய்ந்து முதல்கட்டமாக ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வருவதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளோம் என்றார்.

### 3 நாட்கள் எரிபொருள்...

எங்களுக்கு வழங்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுப்பதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (02) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருள் நெருக்கடி தொடர்பாக மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கு எங்களுடைய வேதனையை தெரிவித்து கொள்கின்றோம். கடந்த வாரங்களில் முன்னெடுத்த செயற்பாடுகளினால் மூன்று மாதங்களுக்கு காணப்பட்ட வரிசைகளை மூன்று நாட்களில் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முடிந்தது.

குறிப்பாக, சில இடங்களில் பொருத்தமற்ற நிர்வாகம், பொருத்தமற்ற திட்டங்களினால், முறையற்ற விநியோகம் என்பனவே இந்த நெருக்கடி நிலைமைக்கு காரணம். எனினும், திட்டங்களை மாற்றி நாங்கள் முன்னெடுத்த நடவடிக்கைகளினால் மூன்று மாதங்களாக காணப்பட்ட வரிசைகளை மூன்று நாட்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தோம்.

இந்த நிலையில், தங்களுக்கு கிடைக்கும் கட்டணம் போதுமானதாக இருந்தாலும், அது போதாது எனக் கூறியும் சில அரசியல்வாதிகளின் தேவைகளுக்காகவும் மீண்டும் எரிபொருள் வரிசையை உருவாக்குவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, மீண்டும் உருவாகியுள்ள எரிபொருள் நெருக்கடியை குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்வோம். குறிப்பாக, எதிர்வரும் மூன்று நாட்களுக்கு இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு மக்கள் எங்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். எதிர்வரும் மூன்று நாட்களில் எரிபொருள் நிலையங்களில் வரிசைகளில் நிற்க வேண்டாம். ஒரு அடி பின்னால் வந்து இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம். நாட்டுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கு அரசாங்கம் உரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்.

எரிபொருள் விலை சூத்திரம் அடுத்த வார அமைச்சரவையில் முன்வைக்கப்படுவதால் தற்போது வரை விலை அதிகரிப்பு குறித்து மக்கள் எவ்வித குழப்பமும் அடைய வேண்டாம்.

இதேவேளை, சில எரிபொருள் நிலையங்களில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் கலந்து விற்பனை செய்யப்படுவதாக புகைப்படங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் எங்களுக்கு முறைப்பாடு செய்ய முடியும்.

அதேபோன்று, மண்ணெண்ணெய் தட்டுப்பாடு இல்லாதபோதிலும் வரிசைகளை காணக் கூடியதாகவுள்ளன. மீன்பிடித்துறை, பெருந்தோட்டங்களில் பாவனை இருந்தாலும் கடந்த காலங்களில் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய் பாவனை அதிகரித்துள்ளது. எனினும், லீற்றருக்கு 200 ரூபா நட்டம் ஏற்பட்டாலும் வறுமை மக்களை கருத்தில் கொண்டு மானிய அடிப்படையில் வழங்கத் தீர்மானித்தோம். ஆனால், இந்த மானியத்தை பயன்படுத்தி பஸ்களில் மண்ணெண்ணெய் பாவனை பயன்பாடு அதிகரித்துள்ளது. இது தொடர்பாக நாங்கள் வேறொரு திட்டங்களை முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம். மீன்பிடித்துறைக்கும் பெருந்தோட்டத்துறைக்கும் தேவையான எரிபொருளை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சட்டவிரோதமாக வழங்கும் நிலையங்களின் அனுமதி பத்திரமும் இரத்துச் செய்யப்படும் - என்றார்.

### இராஜாங்க அமைச்சுப்...

மற்றும் உள்ளூராட்சி ஊடகத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை திம்புலாகல சிறிபுர இசுறு ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (01) நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், 74 ஆண்டுகள் இந்த நாட்டை பிழையான தலைவர்களே ஆட்சி செய்தனர். ஆனால் இந்த நாட்டில் சிறந்த புத்திசாலியான இளம் அரசியல் தலைவர்கள் இருக்கின்றனர். நடைமுறையில் அணுகுமுறை ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவர்களும் இருக்கின்றனர்.

இந்த நாட்டை ஆட்சி செய்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். எதிர்வரும் தேர்தலில் அவர்களுக்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். தேசிய அரசாங்கத்தில் இணைய விரும்பாத யாரையும் அடுத்த தேர்தலில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்ய வேண்டாம் என நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

வெறுப்புடனும் கோபத்துடனும் யாரேனும் செயல்பட்டால் அவர்களுக்கும் கட்சிகளுக்கும் பொருத்தமற்றது. அவ்வாறு ஆட்சி செய்தால் அது நீடித்திருக்காது. அதற்கு சிறந்த காரணங்களும் உள்ளன. விவசாயிகளுடன் இருக்கும் தலைவர் என்ற வகையிலும் விவசாயிகளிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராக நான் கருதுவது தெரிவித்திருந்த, விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளினாலேயே நான் என்னுடைய பதவியை துறக்க வேண்டியிருந்தது.

விவசாயிகளுக்கு உரம் வழங்க முடியாவிட்டால், வழங்க முடியாது என முன்னரே கூற வேண்டும். தங்களால் உரம் வழங்க முடியாவிட்டால், தனியார் நிறுவனங்களின் ஊடாக உரத்தை கொள்வனவு செய்வதற்கு பணத்தை வழங்குமாறு தற்போதைய விவசாய இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புரவிடம் நான் யோசனை ஒன்றை முன்வைத்தேன். அதற்கு சிலர் எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

எனவே, இந்த பொருளாதார சமூக நெருக்கடிகளுக்கு 70ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டை ஆட்சி செய்த அனைவருமே பொறுப்புக் கூற வேண்டும்.

நாடாளுமன்றத்தில் 225 உறுப்பினர்களில் சைக்கிள்கூட இல்லாமல் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி, பல்வேறு மோசடிகளை செய்து நல்ல நிலையிலுள்ளவர்களும் இருக்கின்றனர். நாடாளுமன்றத்தில் நல்லவர்களும் இருக்கின்றனர். இல்லை என்றில்லை.

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எங்களைப்போன்று, அரச உத்தியோகத்தர்கள் மற்றும் மக்களும் பெரும் தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது. இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும். ஆனால் காத்திரமான மாற்றம் கொண்டு வரப்பட்டு, தேசிய கொள்கைக்கமைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மகாவலி இராஜாங்க அமைச்சர் பதவியிலிருந்து தன்னை நீக்கி 50 கோடி ரூபா கொடுத்து வேறொருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு காரணம், ரொஷான் ரணசிங்க மகாவலி இராஜாங்க அமைச்சராக இருந்தால் தன்னுடைய அண்ணாவின் அரசியலுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் அவரின் அரசியல் முடிவுக்கு வரும் என்ற அச்சம்.

50 கோடி ரூபாவுக்கு அமைச்சு பதவி விற்பனை செய்யப்பட்டதுடன், அந்த 50 கோடி ரூபாவை யார் பெற்றுக்கொண்டது என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார்.

### பிறர் குறித்த உணர்வுடன்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகம் முழுவதும் பரந்து வாழும் இஸ்லாமியர்களுடன் இணைந்து ஈத்-உல்-ஃபித்ர் பெருநாளைக் கொண்டாடும் இலங்கையிலுள்ள அனைத்து இஸ்லாமிய சமூகத்தினருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இஸ்லாம் நாட்காட்டியின் மிக முக்கியமான வாழ்த்தில், உங்கள் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்காக உலக வாழ்க்கையிலிருந்து சற்று ஒதுங்கி ஆன்மீக சடங்கு முறைகளை நிறைவேற்றுவது ஒரு சிறந்த பணியாகும்.

அதற்காக இந்த ரமழான் நோன்பு காலத்தில் நீங்கள் அனைவரும் நற்செயல்களில் மாத்திரம் கவனம் செலுத்துவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

பட்டினியால் வாடும் ஒருவரின் வலியைப் புரிந்துகொள்வதும், தியாக வாழ்வின் மதிப்பை உணர்வதும் இந்த நோன்பு காலத்தில் நீங்கள் பெறும் விலைமதிப்பற்ற வாழ்க்கை மதிப்புகளாகும்.

அல்குர்ஆனின் கூற்றுக்கமைய, ரமழான் நோன்புடன் தொடர்புடைய உன்னத நற்பண்புகளைப் பின்பற்றி அந்த நோன்பு காலத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த உங்களுக்கு அதன் ஆன்மீக சாரத்தை சமூகமயமாக்குவதற்கான சந்தர்ப்பம் தற்போது உதயமாகியுள்ளது என்பது எனது நம்பிக்கை.

முழு நாடும் சவால்மிக்கதோர் காலகட்டத்திலுள்ள இத்தருணத்தில் சமூகத்தில் உள்ள பிறர் குறித்த உணர்வுடன் தியாக மனப்பாங்குடன் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் ஆசீர்வாதம் நிறைந்த இனிய ஈத்-உல்-ஃபித்ர் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

### பா.ஜ.க...

உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இரண்டு மணி நேரம் வரை இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சி.வி.கே.சிவஞானம், த.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்புக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை, இது சம்பிரதாயபூர்வமான சந்திப்பு என தெரிவித்தார்.

### சுபீட்ச வாழ்க்கைக்கு...

பரஸ்பர அன்பும், எல்லையில்லா சகோதரத்துவமும், நட்பு ரீதியான அடிப்படையில் உன்னதமான தாய்நாட்டைக் கட்டியெழுப்பும் உறுதியும் கொண்ட நாளாக இந்த ரமழான் பெருநாள் அமையட்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள ரமழான் பெருநாள் வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார். உலகெங்கிலும் உள்ள இஸ்லாமியர்கள் ஒரு மாதகாலம் நோன்பை நோற்று பிறை கண்டதும் கொண்டாடும் பெருநாள் ரமழான் பெருநாள் அல்லது ஈதுல் பித்ர் இன்று கொண்டாடப்படுகிறது. இறைவன் புனித குர்ஆனை இறைதூதர் முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது, ரமழான் மாதத்திலாகும் என்பதுடன் சமத்துவத்தின் மகத்தான செய்தியும் இந்த ரமழான் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ரமழான் மாதத்தில், முஸ்லிம்கள் இறைவனை சிரம்பணிந்து மிகுந்த பக்தியுடன் வணக்கத்தில் ஈடுபடுவர்.

ரமழான் நோன்பு காலத்தில் பசித்திருப்பவர்களின் பசியைப் புரிந்து கொள்ளவும், அது பற்றி உணர்வுபூர்வமாக அறிந்து கொண்டு வாழ்வதற்கும், மனதைக் கட்டுப்படுத்தும் திறனை வளர்த்துக் கொள்வதற்குமான ஒரு சிறந்த வாய்ப்பு இந்த ரமழான் நோன்பாகும்.

இந்த சிறந்த வாழ்க்கை முறைகளை ஒரு மாதம் மட்டுமல்லாமல், அன்றாட வாழ்விலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது அவர்களின் நோக்காகும்.

அவர்களின் அர்ப்பணிப்பு, சுய கட்டுப்பாடு மற்றும் சமத்துவத்திற்கு வழிவகுக்கும் சுய தியாகம் ஆகியவை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சமயக் கல்வியறிவு பெற்ற முஸ்லிம்கள் இலங்கைச் சமூகத்தில் ஏனைய இனங்கள் மற்றும் மதங்களுடன் வரலாற்று ரீதியாக புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பரஸ்பர நட்பு, மனித நேயம், அன்பு ஆகியவற்றால் அவர்கள் நீண்டகாலமாகப் பேணி வரும் நல்வாழ்வின் செய்தி உன்னதமானது.

அனைத்து முஸ்லிம்களுக்கும், பரஸ்பர அன்பும், எல்லையில்லா சகோதரத்துவமும், நட்பு ரீதியான அடிப்படையில் உன்னதமான தாய்நாட்டைக் கட்டியெழுப்பும் உறுதியும் கொண்ட நாளாக இந்த ரமழான் பெருநாள் அமையட்டும்!

### பொருளாதார...

கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் குடும்பத்திற்கு தேவையான உணவு உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளைக் கூட வழங்க முடியாத அவலநிலையில் இவர் நீண்ட நாட்களாக வாழ்ந்து வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் கடந்த 29ஆம் திகதி காலை வீட்டை விட்டு வெளியே சென்ற நிலையில் மாலை வரை வீடு திரும்பவில்லை என அவருடைய மனைவி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அவருடைய பேத்தி, வயலுக்குச் சென்று பார்த்தபோது மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் உயிரிழந்தவரின் சடலம் காணப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# 13ஆவது திருத்த அமுலாக்கலுக்கு நடவடிக்கை

## கூட்டமைப்பினரை சந்தித்த பின் பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலை யாழில் தெரிவிப்பு

(யாழ். செய்தியாளர்)

இந்திய அரசினால் உருவாக்கப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய பா.ஜ.கவின் தமிழக தலைவர் கு. அண்ணாமலை யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பா.ஜ.க. தமிழக தலைவர் அண்ணாமலை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்தபின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு அண்டைநாடான இந்தியா, இலங்கைக்கு பல்வேறுபட்ட உதவிகளை வழங்குகின்றது. எரிபொருள் மருந்து மற்றும் பண உதவி போன்ற பல்வேறுபட்ட உதவிகளை இந்த அரசாங்கத்திற்கு இந்திய அரசு வழங்கி வருகின்றது. அதேபோலத்தான் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு நமது இந்திய நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கரால் அண்மைய இலங்கை விஜயத்தின்போது இலங்கை ஜனாதி பதிக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அது விரைவில் நடைமுறைத் தப்படும் சாத்தியம் உள்ளது.

அதேபோல் இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நிலையானது விரைவில் சுமுகமான நிலையை எட்ட இறைவன் அருள் புரியவேண்டும் அதேபோல் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இலங்கையிலிருந்து அகதிகளாக இந்தியா வருவோருக்கு கடுமையான சட்டங்களை பிரயோகிக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளோம்.

இலங்கை மக்களை தொப்புள் கொடி உறவுகளாக மிகவும் அன்பாகவும் ஆதரவாகவும் நேசக்கரம் நீட்டி பார்க்கின்றோம்.

தென் இந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் பாதிப்பை எதிர்நோக்குகிறார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. அது உண்மைதான். அது கட்டாயமாக தீர்க்கப்படவேண்டிய விடயம்தான். ஆனால், சிறையில் இருப்பதற்காக எந்த இந்திய மீனவனும் இலங்கை கடற்பரப்புக்குள் வருவதில்லை. ஏதோ ஒரு தவறால் வருகின்றார்கள். அது தொடர்பில் உரிய கவனம் எடுப்பதாகவும் தெரிவித்தார்.

தனியார் விடுதியில் கூட்டமைப்பினருக்கும் அண்ணாமலைக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், சித்தார்த்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



## தலவாக்கலையில் ஆணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(தலவாக்கலை செய்தியாளர்)

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் லயன் தொடர் குடியிருப்பொன்றின் பின்னால் இருந்த 9 அடி ஆழமான கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று (02) மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

வேலு ராஜரட்ணம் (வயது 50) இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் கடந்த முதலாம் திகதி இரவு வெளியே சென்றவர் வீடு திரும்பாத நிலையில் வீட்டார் அவரை தேடியுள்ளனர்.

இந்நிலையில், வீட்டுக்குப் பின்னால் இருந்த 9 அடி ஆழமான கிணற்றிலிருந்து நேற்று காலை அயலவர்களால் சடலமாக மீட்கப்பட்டார். சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் மரண பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு

நாடுபூராகவுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் முற்றாக தீரும் நிலை உருவாகியுள்ளதாக இலங்கை தனியார் எரிபொருள் தாங்கி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஏ.எம்.எச்.அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சங்கம் என்ற அடிப்படையில் கடந்த சனிக்கிழமை முதல் விநியோக நடவடிக்கைகளிலிருந்து விலகியுள்ளோம். எரிபொருள் தாங்கிகள் விநியோக நடவடிக்கைகள் கடந்த சனிக்கிழமை முதல் முற்றாக தடைப்பட்டன. சனிக்கிழமைக்கு முதல்நாள் டிப்போக்களில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த எரிபொருள் தாங்கிகள் மாத்திரமே பயணித்தன.

இந்நிலையில், நாட்டின் எந்தவொரு பகுதியிலும் எரிபொருள் விநியோக நடவடிக்கை இடம்பெறவில்லை. இன்றும் (நேற்றும்) எரிபொருள் விநியோக நடவடிக்கைகளிலிருந்து விலகுவதாக சகல எரிபொருள் தாங்கி உரிமையாளர்களும் அறிவித்திருந்தனர்.

இன்று கொலன்னாவை மற்றும் முத்துராஜவல எரிபொருள் மத்திய நிலையங்களில் எந்தவொரு எரிபொருள் தாங்கிகளும் உள்நுழையவும் இல்லை. டிப்போக்களுக்கும் செல்லவில்லை. லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

இந்நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லாமல்போகும் நிலையே தோற்றம் பெற்றுள்ளது.

## மிரிஹானை போராட்டக்காரர்கள் புலனாய்வுப் பிரிவில் முன்னிலை

மிரிஹானையில் இடம்பெற்ற எதிர்ப்புச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 15 பேரும் விசாரணைகளுக்காக நேற்று (02) குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பதிவுசெய்வதற்காகவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு விரைவாக தீர்வை பெற்றுக் கொடுக்கக் கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹானையிலுள்ள வீட்டுக்கு அருகில் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது ஏற்பட்ட அமைதியின்மையின் காரணமாக 54 பேர் பொலிஸ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அதற்கமைய, நேற்றுக் காலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருகை தந்திருந்தபோது கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களில் 15 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.



அரசியல், பொருளாதார நெருக்கடிகள் கொழும்பு அரசியலை ஆட்டுவித்துக்கொண்டிருக்கின்றன.

மே தினக் கூட்டங்களை தொழிலாளர்களுக்காக நடத்தும் அரசியல் கட்சிகள் இம்முறை தமது மே தினக்கூட்டங்களை முழுக்க முழுக்க அரசியல் கூட்டங்களாக நடத்தின. மக்கள் விடுதலை முன்னணி மட்டும் சற்று வித்தியாசமாக வழமை போல் தொழிலாளர் கோஷங்களை எழுப்பி அவர்களுக்கான பேரணியாக முன்னெடுத்திருந்ததை குறிப்பிட்டாக வேண்டும்.

ஆளுங்கட்சியின் அரசியல் நிலைமையும் திரிசங்கு நிலைக்குள்ளாகியுள்ளது. இப்படியே தற்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆயுட்காலம் தொடர்ந்து நீடிக்குமா என்பதுதான் கேள்வி.

கடந்தவாரம் நடைபெற்ற மொட்டுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமரைப் பதவி நீக்கி, புதிய இடைக்கால அரசு ஒன்றை நிறுவும் தமது எண்ணத்திலிருந்து தாம் விலகிவிட்டார் என்பதுபோல் கோடி காட்டியிருக்கின்றார்.

ஆனால், ஜனாதிபதி நம்ப முடியாதவர். தமது எந்த முடிவிலும் உறுதியாக நிற்காதவர். ஏற்கனவே இடைக்கால அரசு ஒன்றை அமைப்பேன் என்று மகாநாயக்க தேரர்களுக்கு அவர் வாக்குறுதியளித்திருக்கிறார் என்பதும் மறந்து விடக் கூடியதல்ல. இடைக்கால அரசை அமைக்கும் முயற்சியை அவர் தொடர்ந்தால் என்னவாகும்?

பாவம், புதிதாக அமைச்சுப் பதவிகளை ஏற்ற இளம் அரசியல்வாதிகளின் நிலைமை. அவர்களின் அமைச்சர் பதவி அனுபவம், வாரங்கள் கடந்து நீடிக்கப் போவதில்லை என்றாகி விடும்.

பெயர் என்னவோ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு என்பதுதான். ஆனால், இதற்கு முன்னிருந்த அமைச்சரவையோ, இப்போதிருக்கின்ற அமைச்சரவையோ பிரதமரின் விருப்பப்படியான தெரிவே அல்ல.

அரசமைப்பின் இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொடுத்தமை மூலம் அமைச்சர்களைத் தெரிவுசெய்யும் விடயத்தில்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மே 03ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# கெடுகுடி சொற்கேளாது!

பிரதமர் என்ற முறையில் தமக்கிருந்த அதிகாரத்தை ஜனாதிபதியிடம் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு இப்போது கையறு நிலையில் முழுசுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

இப்போது இருக்கின்ற அமைச்சரவை கூட பிரதமரின் விருப்பம், இசைவு, இணக்கத்துக்கு அமைய நியமிக்கப்படவில்லை.

தான் நியமிக்காத அமைச்சரவைக்கு, தன் வழிப்படுத்தலில் செயற்படாத அமைச்சரவைக்கு, தான் முடிவெடுக்காத அரசுத் தீர்மானங்களுக்குப் பொறுப்பேற்று பதவியை இழக்க வேண்டிய கட்டாயத்துக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தள்ளப் பார்க்கின்றார் ஜனாதிபதி.

ஜனாதிபதி என்ற முறையிலும், அரசுத் தலைவர் என்ற முறையிலும், அமைச்சரவையின் தலைவர் என்ற வகையிலும், சகல நிறைவேற்றதிகாரங்களையும் கொண்டவர் என்ற ரீதியிலும், கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த முடிவுகளும், செயற்பாடுகளும், அவரின் வழிகாட்டல்களுமே நாட்டை இன்று இவ்வளவு நெருக்கடி நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன.

ஆனால், இதற்கான பிழைகள், தவறுகள், பொறுப்புகள் அனைத்தையும் தமையனாரான பிரதமர் மீது சுமத்தி, அவரது தலையை உருட்டுவதன் மூலம், தாம் தப்பிக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி கோட்டாபய மனக்கோட்டை கட்டுகின்றார்.

பிரதமரைப் பொறுத்தவரை அவர் பதவியைத் தாமாக விட்டுச் செல்லும் எண்ணத்தில் அடியோடு இல்லை. ஆகவே, அவரைப் பிரதமர் பதவியிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்து, அதன்மூலம் தமது இடைக்கால அரசு அமைக்கும் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய முன்னே நகர்த்துவாரானால் மோதல், முரண்நிலை வெடிக்கும்.

இந்தப் பின்புலத்தில் இந்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் அணிகளின் நிலைகள், நிலைப்பாடுகள் கணிசமான அளவில் மாறும். ராஜபக்ஷக்களே எதிரெதிர் தரப்பில் அமரும் சூழலும் கூட வரலாம்.

இப்போது இருக்கும் அமைச்சரவை ஓரிரு வாரத்தில் ஆயுளை முடிப்பது போன்று கோட்டாபயவின் உத்தேச இடைக்கால அரசின் அமைச்சரவை கூட அற்ப ஆயுளில் தூக்கி எறியப்படும் வாய்ப்புகள் அதிகம். அதுவரையான அமைச்சரவைகள் கோட்டாபயவுக்கு இணக்கமானவையாக இருந்தாலும், அதற்குப் பின்னர் வரக்கூடிய அமைச்சரவை ஜனாதிபதி கோட்டாபயவுடன் முரண்டு பிடிப்பதாகவே அமையும்.

"ஓடு மீன் ஓடி உறுமீன் வரும் வரைக் காத்திருக்கும் கொக்கு" போன்று அத்தகைய முரண்டு பிடிக்கும் அமைச்சரவைக்கு முண்டு கொடுக்கத் தமிழர்கள் காத்திருப்பது நல்லது.

அரசியலின் இந்த இக்கட்டான நிலைமை, பொருளாதார ரீதியில் மேலும் அதலபாதாளத்திற்கு நாட்டைக் கொண்டு சென்றுவிடப்போகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான உதவிகள், உள்ளக அரசியல் ஸ்திரத்தன்மையைப் பொறுத்தே கிடைக்கலாம் என்ற சூழ்நிலையில் இந்த அரசியல் இழுபறி நிலைமையை மேலும் மோசமாக்கவே போகின்றன. 'கெடுகுடி சொற்கேளாது' என்பதற்கமைய நல்லுபதேசங்களைப் பெறாமல், கேட்காமல் உலகிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு மக்களைத் தள்ளியுள்ளது இந்த அரசு!



# உலக பத்திரிகை சுதந்திர நாள் இன்று

உலக பத்திரிகை சுதந்திர நாள் (World Press Freedom Day) என்பது பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும் 'மனித உரிமைகள் சாசனம்' பகுதி-19 இல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் அவையினால் சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் மே 3 ஆம் நாளன்று பத்திரிகை சுதந்திர நாளாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆபிரிக்கப் பத்திரிகைகளால் கூட்டாக 1991 ஆம் ஆண்டு இந்நாளிலேயே 'பத்திரிகை சுதந்திர சாசனம்' (Declaration of Windhoek) முன்வைக்கப்பட்டது. இது 1991 ஆம் ஆண்டு யுனெஸ்கோ (UNESCO) அமைப்பினால் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தின் 26 ஆம் அமர்வில் சிபாரிசு செய்யப்பட்ட, உலகின் சகல பிராந்தியங்களுக்குமான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்திற்கானதும், ஊடகச் சுதந்திரத்தினதும் பாதுகாப்பிற்கும் மேம்படுத்தலிற்குமான ஆணை என்ற தொனிப்பொருளில் பரிந்துரைக்கப்பட்ட கட்டளையின் நிமித்தமாக உருவானது.

இந்நாளில் ஊடக சுதந்திரத்துக்காகப் பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு ஆண்டுதோறும் யுனெஸ்கோ நிறுவனத்தினர் யுனெஸ்கோ/கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருது வழங்கி கௌரவிக்கின்றனர். இவ்விருது கொலம்பியப் பத்திரிகையாளர் கிலெர்மோ கானோ இசாசா என்பவரின் நினைவாக வழங்கப்பட்டு வருகிறது. இவர் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் 17 இல் அவரது அலுவலகம் முன்பாக வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரின் கொலையின் பின்னரே பத்திரிகை சுதந்திரம் தொடர்பான பேச்சு வலுப்பெற்றது.

இந்நாள் அன்று, உலக அமைதிக்காகவும், பேச்சு சுதந்திரத்திற்காகவும் மற்றும் பத்திரிகை தர்மத்தினூடாகவும் பல இன்னல்களைத் தாண்டிப் போராடிய பத்திரிகை எழுத்தாளர் ஒருவருக்கு 25,000 டொலர் பெறுமதியான பரிசு வழங்கப்படுகின்றது. சுமார் 14 நபர்களைக் கொண்ட குழுவால் குறிப்பிட்ட இத்தெரிவு நடைபெறும் .

யுனெஸ்கோ/கிலெர்மோ கானோ உலக பத்திரிகை சுதந்திர விருது (UNESCO/Guillermo Cano World Press Freedom Prize), என்பது உலக அமைதிக்காகவும், பேச்சு சுதந்திரத்திற்காகவும் மற்றும் பத்திரிகை தர்மத்தினூடாகவும் பல இன்னல்களைத் தாண்டிப் போராடிய பத்திரிகையாளர், அமைப்பு, அல்லது ஒரு நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் யுனெஸ்கோ விருதாகும். இவ்விருது 1997 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

ஆண்டுதோறும், யுனெஸ்கோ நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 சுயாதீன நபர்களைக் கொண்ட குழுவொன்று அரச சார்பற்ற அமைப்புகளினாலும், யுனெஸ்கோ உறுப்பு நாடுகளினாலும் பரிந்துரைக்கப்படும் நபர்கள் அல்லது அமைப்புகளிலிருந்து வெற்றியாளரைத் தேர்ந்தெடுக்கின்றது.

**விருது பெற்றவர்கள்**

2014: அகமெத் சீக், துருக்கி
2013: ரீயொட் அலெமு, எத்தியோப்பியா
2012: எய்னுல்லா பத்துல்லாயெவ், அசர்பைஜான்
2011: அகமது செய்தபாதி, ஈரான்
2010: மோனிக்கா கொன்சாலெசு முகிக்கா, சிலி
2009: லசந்த விக்ரமதுங்க, இலங்கை (இறப்பின் பின்னர்)
2008: லீடியா ரிபெய்ரோ, மெக்சிக்கோ
2007: அன்னா பொலித்கொவ்ஸ்கயா, ரஷ்யா (இறப்பின் பின்னர்)
2006: மேய் சிதியாக், லெபனான்
2005: செங் யிசொங், சீன மக்கள் குடியரசு
2004: ராவுல் ரிவேரோ, கூபா
2003: அமிரா ஆஸ், இஸ்ரேல்
2002: ஜெப்ரி நியரோட்டா, சிம்பாப்வே
2001: வின் தின், மியன்மார்
2000: நிசார் நயூப், சிரியா
1999: யேசுஸ் பிளான்கோர்னாலெசு, மெக்சிக்கோ
1998: கிறிஸ்டீனா அன்யான்வு, நைஜீரியா
1997: காவோ யூ, சீனா



# ட்ரோன்களுக்கு பயப்படும் அமெரிக்கா

எதிர்வரும் 2021க்குள், அமெரிக்காவில் 20 இலட்சம் ட்ரோன்கள் பயன்பாட்டுக்கு வந்துவிடும் என்கிறது, அமெரிக்க விமான அதிகாரசபை. ஏற்கனவே, அமெரிக்க எல்லைப் பகுதி முதல், சிறைச்சாலைகள் வரை குற்றச் சம்பவங்களுக்கு, ஆளில்லா சிறிய விமானங்களான ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

செப். 11 இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு ஆட்களுள்ள விமானங்கள் கடத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இந்நிலையில், ஆளில்லாத விமானங்களை, மிக எளிதாக அத்தகைய தாக்குதல்களுக்குப் பயன்படுத்த முடியும் என அஞ்சுகிறார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன். தங்கள் வான் எல்லைக்குள், அனுமதி பெறாத, சந்தேகத்திற்கிடமான வகையில் ட்ரோன்கள் பறந்தால் அவற்றை சுட்டு வீழ்த்தும் அதிகாரத்தை மாநில, நகர, கிராம நிர்வாகத்திற்கு அதிகாரம் வழங்க வேண்டும் என பைடன் கருதுகிறார்.

இதற்கான மசோதாவை, அமெரிக்க நாடாளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்ற ஆதரவு திரட்டி வருகிறார் அவர். அத்துமீறும் ட்ரோன்களின் சிக்னல்களை ஜாம் செய்வது முதல், வேறொரு ட்ரோனை அனுப்பி வலை வீசிப் பிடிப்பது வரை, ட்ரோன் எதிர்ப்பு தொழில்நுட்பங்களை பட்டியலிட்டு மதிப்பிட்டுத் தரும்படி பைடன் வல்லுனர்களைக் கேட்டிருக்கிறார்.

இறுதிப் பட்டியலை எட்டும் ட்ரோன் எதிர்ப்புக் கருவிகளை, கிராம அதிகாரி வரை வாங்கி வைத்துக்கொள்ள அனுமதி தரவும் பைடன் யோசித்து வருகிறார். ஆப்கானிஸ்தான் முதல் அரபு நாடுகள்வரை, தாக்குதல்களுக்கு ட்ரோன்களை பெருமளவில் பயன்படுத்திய நாடு அமெரிக்கா என்பதை பைடன் மறந்துவிட்டார் போலும்.

# கட்டடத்தை அச்சிட உதவும் கண்ணாடித்தூள்!



மணல் தட்டுப்பாடு இப்போது கட்டுமான உலகத்தைப் பிடித்து ஆட்டுகிறது. இதற்கு மாற்றாக எம் - சேண்ட் போன்றவை வந்தாலும், பற்றாக்குறை குறையவில்லை. என்ன செய்வது? ஏராளமான பொருட்செலவில் தயாரிக்கப்படும் கண்ணாடிகள், உடைந்ததும் பெருமளவில் குப்பை மேட்டுக்கு வந்து சேர்கின்றன.

இந்தக் கண்ணாடிகள் செய்யப்படுவதே மணலில் இருந்துதான். எனவே, வீணாகும் கண்ணாடிகளை பொடியாக்கி, மணலுக்குப் பதில் கொங்கிறீட்டில் கலக்கும் கலவையாகப் பயன்படுத்தலாம் என்பதை சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

வீணான கண்ணாடிகளை நுணுக்கி, சிமெண்ட் மற்றும் தண்ணீருடன் கலந்து, கொங்கிறீட் கலவையை சிங்கப்பூர் விஞ்ஞானிகள் உண்டாக்கினர்.பிறகு, கட்டடம் கட்ட உதவும், முப்பரிமாண கட்டட அச்சியந்திரத்தின் அச்சு முனை வழியே இந்தக் கலவையை செலுத்தி, கொங்கிறீட் இருக்கை ஒன்றை அச்சிட்டனர்.

அப்படி அச்சிட்ட அந்த இருக்கை, மணல் கொங்கிறீட் கலவையில் செய்த இருக்கை போலவே உறுதியாக இருந்தது. மேலும், கண்ணாடிப் பொடிக் கலவைக்கு, மணல் கலவை போல் அதிக நீர் தேவைப்படவில்லை. இப்போது தேவையெல்லாம், வீணாகும் கண்ணாடியை சேகரித்து, பொடிசெய்து தரும் தொழில்கள்தான்.

# இன்றைய நாளில்...

- 1802 – வொஷிங்டன் டி.சி. நகரமாக்கப்பட்டது.
- 1837 – ஏதென்ஸ் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
- 1860 – பதினைந்தாம் சார்லஸ் சுவீடன் மன்னராக முடிசூடினார்.
- 1879 – யாழ்ப்பாணம், கரவெட்டியில் பிள்ளையார் கோயில் திருவிழா ஒன்றின்போது இடம்பெற்ற தீ விபத்தில் 50 பேர் வரையில் தீயில் கருகி மாண்டனர். நூற்றுக்கணக்கானோர் உடல் ஊனமுற்றனர். கோயில் முழுவதும் எரிந்து சாம்பலானது.
- 1913 – இந்தியாவின் முதல் முழு நீளத்திரைப்படம் ராஜா ஹரிஸ்சந்திரா வெளியானது.
- 1939 – சுபாஸ் சந்திரபோஸ் அனைத்திந்திய போர்வார்ட் ப்ளொக் கட்சியை ஆரம்பித்தார்.
- 1941 – பி.பி.சி. தமிழோசை வானொலி ஆரம்பிக்கப்பட்டது.
- 1986 – கொழும்பு விமான நிலையத்தில் 'எயர்லங்கா-512' பயணிகள் விமானத்தில் குண்டு வெடித்ததில் 21 பேர் கொல்லப்பட்டனர். 41 பேர் காயமடைந்தனர்.


# நக்கல் நமசிவாயம்

பெற்றோல் இருந்தா டீசல் இல்லை..
டீசல் இருந்தா பெற்றோல் இல்லை..
பால்மா இருந்தா கேஸ் இல்லை..
கேஸ் இருந்தா பால்மா இல்லை..

ஒண்டு இருந்தா இன்னொன்று இல்லை..! எல்லாம் இருக்கிற நேரம் கையில காசு இருக்காது பாருங்கோ..!



# மூலப்பொருட்களின் விலையை காட்சிப்படுத்தி வடை விற்பனை



(நானுஓயா நிருபர்)

நுவரெலியா பிரதான பஸ் நிலையத்திற்கு அருகில் வடை வியாபாரி ஒருவர் வடையின் விலையை காட்சிப்படுத்தாமல் வடை தயாரிக்கும் மூலப்பொருட்களின் விலையை காட்சிப்படுத்தி வடை விற்பனைசெய்து வருகிறார். இவர், நல்லாட்சியின்போது (2019) பெற்றுக்கொண்ட மூலப்பொருட்களின் விலையையும் தற்போதைய ஆட்சியில் காணப்படும் விற்பனை (2022) விலையையும் காட்சிப்படுத்தி வடை விற்பனை செய்து வருகிறார்.

மூலப்பொருட்களின் விலையேற்றத்தால் தாம் வடையின் விலையை அதிகரித்துள்ளதாகவும், வடை விலை அதிகரிப்பு தொடர்பில் நுகர்வோர்கள் வினவியதால், வடை தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் விலையை காட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும் வடை வியாபாரி தெரிவித்துள்ளார்.

# ஓய்வுக்காக சென்ற 13 பேர் கைது

(மன்னார் நகர் நிருபர்)

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஓய்வை கழிப்பதற்காக தலைமன்னார் கடலுக்குச் சென்ற 10 சிறுவர்கள் உட்பட 13 பேர் தலைமன்னார் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியா செல்ல முயற்சிப்பதாக தெரிவித்து இவர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், நேற்று (02) மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

வழக்கை விசாரித்த மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஹைபதுல்லா குறித்த 13 நபர்களையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டிருந்தார்

அதனைத் தொடர்ந்து அறிக்கையை பார்வையிட்ட பின்னர் குறித்த 10 சிறுவர்களும் பெற்றோர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டதோடு 3 பேரையும் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஜப்பானுக்கான தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி

## இலங்கை மீதான நம்பிக்கையீனமே காரணம் என நிபுணர்கள் சுட்டிக்காட்டு

(நமது விசேட செய்தியாளர்)

இவ்வாண்டு ஜப்பானுக்கான இலங்கை தேயிலை ஏற்றுமதி 42 வீதம் குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக முதல் காலாண்டில் மாத்திரம் 52 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஜப்பான் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களில் 1.5 மில்லியன் கிலோகிராம் தேயிலையை இறக்குமதி செய்துள்ளது. எனினும், இவ்வாண்டு ஜனவரிமுதல் மார்ச்வரையான காலப்பகுதியில் 08 இலட்சத்து 72 ஆயிரம் கிலோகிராம் தேயிலையையே இறக்குமதி செய்துள்ளது.

2021ஆம் ஆண்டுமுதல் மூன்று மாதங்களில் 338 மில்லியன் டொலர்கள் வருமானமாகப் பெற்றுக்கொண்ட போதிலும் இவ்வாண்டு 286 மில்லியன் டொலர்களாக குறைவடைந்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான பொருளாதார நிலைமையே இதற்குக் காரணம் என நிபுணர்களால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கையுடன் வர்த்தகம் செய்வதில் ஜப்பானியர்கள் நம்பிக்கையில்லாமல் இருக்கின்றமை தொடர்பில் நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஜப்பான், வேறு நாடுகளில் தேயிலையை பெற்றுக்கொள்ள ஆரம்பித்தால் மீண்டும் இலங்கைத் தேயிலையின் சுவைக்கு மாறுவது கடினம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக அமைதிக்கும் நாட்டின் சுபீட்சத்துக்குமாக அனைவரும் இறைவனை பிரார்த்திப்போமாக!

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ரமழான் வாழ்த்து



ஈகைத் திருநாளாம் ஈதுல் பித்ரை கொண்டாடும் உலகெங்கும் வாழும் பல கோடி இஸ்லாமிய நெஞ்சங்களுக்கு எனது இனிய நோன்புப் பெருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதுடன், அருள் பொழியும் சங்கைமிகு இப்பெருநாள் தினத்தில் முழு உலக அமைதிக்கும் எமது தாய்நாட்டின் நிம்மதியான வாழ்விற்கும் எல்லாம் வல்ல அல்லாஹுத் தஆலாவிடம் மனமுருகிப் பிரார்த்திப்போமாக - என கிராமியப் பொருளாதாரப் பயிர்ச்செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் விடுத்திருக்கும் ரமழான் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

புனித நோன்பு எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றுள்ளது. அது எமக்கு கருணை, விட்டுக் கொடுப்பு என பல பாடங்களை போதித்துச் சென்றுள்ளது.

மேலும் எமது புனித மார்க்கமானது அமைதி, இரக்கம், ஒற்றுமை, பொறுமை, மனிதநேயம், ஜீவகாருண்யம் ஆகிய உயரிய குணவியல்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதையும் நாம் திடமாகவும் உறுதியாகவும் அறிந்து வைத்துள்ளோம்.

இன்று எமது நாடு எதிர்நோக்கியுள்ள அசாதாரண சூழ்நிலையில் நாம் கொண்டுள்ள உயரிய குணவியல்புகள் மூலம் எமது ஒற்றுமைமிக்க தாய்நாட்டை கட்டியெழுப்ப திடசங்கற்பம் பூணுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்வதோடு கண்ணியமிக்க ரமழான் மாதத்தில் நாம் எடுத்துக்கொண்ட பயிற்சிகளையும் செய்துவந்த இபாதத்துகளையும் தொடர்ந்து செய்வதுடன், வசதியற்றிருக்கும் எமது சகோதரர்களை இனங்கண்டு தானதர்மங்களை செய்து இறைவனின் நல்லருளை பெற்ற நல்லடியார்களாக மாறுவோமாக என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# மாத்தளையில் பெண்களிடம் கொள்ளையர்கள் கைவரிசை

(மாத்தளை நிருபர்)

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

இதன்போது தமது உடைமைகளை கொள்ளையடித்துச் செல்லும் வழிப்பறி கூட்டமொன்று மாத்தளை மாவட்ட பகுதிகளில் நடமாடித் திரிவதாக பொலிஸார் தெரிவிக்கின்ற அதேவேளை, தமது உடைமைகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தற்பொழுது நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையினால், தொழில் நிமித்தம் வெளியே சென்றதும் தங்களது வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ள அநேகமாக பெண்களே வருகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சில வழிபறிக் கொள்ளையர்கள் மேற்படி பெண்களிடமும் வரிசையில் நிற்கும் வயோதிபர்களிடமும் உதவி செய்வதுபோன்று பாசாங்கு செய்து அவர்களின் கையில் இருக்கும் பணப்பைகளை சூசகமாக திறந்து பணம் மற்றும் ஏனைய பொருட்களை கொள்ளையடித்து செல்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் தட்டுப்பாட்டு நிலையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் இந்தக் கொள்ளையர் கூட்டங்கள், தங்களது காரியம் கை கூடியதும் வரிசையிலிருந்து மாயமாக மாறிவிடுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# பிரித்தானியாவில் போட்டியிடும் 6 தமிழ் வேட்பாளர்கள் தீவிர பரப்புரையில் தமிழின செயற்பாட்டாளர்கள்



பிரித்தானியாவின் பழமைவாதக் கட்சி சார்பில் உள்ளூர் மாநகர சபைத் தேர்தலில் 6 தமிழர்கள் போட்டியிடும் நிலையில், அவர்களை வெல்ல வைப்பதற்கான தீவிரமான பரப்புரையில் தமிழின செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

லண்டனின் ஹாரோ மாநகர சபைத் தேர்தல் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. குறித்த தேர்தலில் பழமைவாதக் கட்சி சார்பில் 6 இலங்கைத் தமிழர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களுக்கு தமிழ் வாக்காளர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து அவர்களை வெற்றிபெற வைக்கும் தீவிர பரப்புரைச் செயற்பாட்டில் புலம்பெயர் தமிழின செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# மக்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்

## அலிசப்ரி ரஹீம் எம்.பியின் பெருநாள் வாழ்த்து

(ரஸீன் ரஸ்மின்)



புனித ரமழான் மாதம் முழுவதும் நோன்பை நிறைவேற்றிவிட்டு பெருநாளை கொண்டாடுகின்ற இவ்வேளையில், நாடும், நாட்டுமக்களும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்பதாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் விடுத்துள்ள புனித நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

"ஒரு மாதம் நாம் பசித்திருந்து இறை வணக்கத்தில் ஈடுபட்டதுபோல், இன்று கொண்டாடும் பெருநாள் தினத்திலும் இறைவனுக்குப் பொருத்தமில்லாத செயற்பாடுகளில் ஈடுபடாமலும் குடும்பத்தார் மற்றும் அயலவர்கள், சக சமூகத்தவர்களுடனும் மிகவும் அந்நியோன்னியமாகவும் ஒற்றுமையாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு முஸ்லிமும் தமது அயலவர்களுக்கும், ஏழை மக்களுக்கும் அவர்களின் தேவைகள் உணர்ந்து, அந்தத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் நோற்ற நோன்பின் முழுமையான பலனும் நமக்குக் கிடைக்கும்.

அதேவேளை, மாற்று சமூகத்தவர்கள் நம்மைப் பார்த்து வியக்கின்ற அளவுக்கு எமது நடவடிக்கைகள் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

அதுவே முஸ்லிம்கள் மீது அவர்கள் கொண்டுள்ள பிழையான- தப்பபிப்பிராயங்களை களைந்து, நல்லபிப்பிராயங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு வழியேற்படுத்தும்.

அதன் மூலம் மாற்று சமூகத்தவர்களுடன் பரஸ்பரம் நல்லுறவையும் ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப முடியும் என நம்புகின்றேன்.

அத்துடன், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து மீண்டும் பழைய நிலைக்கு நாம் அனைவரும் நிம்மதியாக வாழ கட்சிப் பேதங்களை மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒன்றிணைந்து பயணிப்போம்" - என்று தெரிவித்துள்ளார்.

# தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் மீளாய்வு



நெடுஞ்சாலைகள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய வீதி மற்றும் பாலங்கள் அபிவிருத்தி தேசிய வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் மாவட்ட மட்டத்தில் அதன் முன்னேற்றம் ஆகியவை நெடுஞ்சாலைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கனக ஹேரத் தலைமையில் அண்மையில் மீளாய்வு செய்யப்பட்டது.

இதன் கீழ், மொனராகலை, மட்டக்களப்பு மற்றும் கேகாலை ஆகிய மூன்று மாவட்டங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீதி மற்றும் பால திட்டங்கள் மற்றும் உத்தேச திட்டங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் முதன்மையான வீதி உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணியை முன்னெடுத்துச் செல்லும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பாக மாவட்ட மற்றும் மாகாண அதிகாரிகளுடன் நீண்ட நேரம் கலந்துரையாடியது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு செயற்படுவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.


அண்மைக்காலமாக நாட்டில் பெருமளவிலான வீதி அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, பூர்த்திசெய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. செயல்பாட்டிலுள்ள சில திட்டங்களையும், தொடங்கப்படாமல் உள்ள பல திட்டங்களையும் விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் கருத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 1,00,000 கிலோமீற்றர் வீதித் திட்டம், ஒருங்கிணைந்த கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டம், ரன் மாவத் திட்டம், மகநெகுமவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வீதி அபிவிருத்தித் திட்டங்கள், கிராமத்துடன் உரையாடல் போன்ற வேலைத்திட்டங்களின் கீழ் வீதி மற்றும் பால அபிவிருத்தித் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளன. அதை விரைந்து முடிக்க தேவையான நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

வெள்ளம் மற்றும் மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வகையில் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் விஜித பேருகொட, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பேமசிறி, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரஞ்சித் திஸாநாயக்க, மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) சந்திராணி ஆகியோர் கலந்துகொண்டனர். சமிந்த அத்தலுவகே, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.வீரகோன் மற்றும் நிறைவேற்று அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.


#WorldPressFreedomDay



டிஜிட்டல் ஆக்கிரமிப்பின் கீழ் ஊடகவியல்

உலக பத்திரிகை சுதந்திர தினம் 2022

அடிப்படை உரிமைகள் மற்றும் பத்திரிகை சுதந்திரத்தை உறுதி செய்வதில், ஊடகத்துறையில் டிஜிட்டல் கண்காணிப்பின் தாக்கத்தை உணர்ந்து அவதானத்துடன் இருப்போம்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் அதன் பங்காளி அமைப்புகளும் "டிஜிட்டல் ஆக்கிரமிப்பின் கீழ் ஊடகவியல்" என்ற இவ்வாண்டிற்கான யுனெஸ்கோவின் கருப்பொருளிற்கு ஏற்ப உலக பத்திரிகை சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றனர்.

Sri Lanka Press Institute

NSSL TEGOSL FMM SLWJA

# எரிபொருள் போக்குவரத்திலிருந்து சாரதிகள் விலகிச் சென்றால் மாற்று வழிகள் பயன்படுத்தப்படும்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

(ஹாலிஎல நிருபர்)



இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி சாரதிகள் சங்கத்தின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக ஊவா மாகாண பிரதான நகரங்களான பதுளை, ஹாலிஎல, பண்டாரவளை, ஹப்புத்தளை, பசறை, வெலிமடை போன்ற பிரதான நகரங்களில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடும் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் எரிபொருள் விலைக்கேற்ப போக்குவரத்து கொடுப்பனவுகள் அதிகரிக்கப் படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி சாரதிகள் சங்கத்தினால் இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.இந்த தொழிற்சங்க நடவடிக்கையினால் ஊவா மாகாணத்தில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் முற்றாக தடைப்பட்டுள்ளதோடு, போக்குவரத்து சேவைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கேற்ப, போக்குவரத்து விலைகள் அதிகரிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை பெற்றோலிய தனியார் தாங்கி சாரதிகள் சங்கம் எரிபொருள் போக்குவரத்து நடவடிக்கைகளில் இருந்து விலகியுள்ளது.

போக்குவரத்து எதிர்ப்பு நடவடிக்கைக்கு எரிசக்தி அமைச்சர் மற்றும் மின்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள் ளார். அதில், எரிபொருள் போக்குவரத்திலிருந்து சாரதிகள் விலகிச் சென்றால், மாற்று வழிகள் பயன்படுத்தப்படும். தனியாருக்கு குத்தகைக்கு விடப்படும் பவுசர்களுக்கான விலைகள் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் ஐந்து தடவைகள் திருத்தியமைக்கப்பட்டபோதிலும், இது கடந்த முறை திருத்தப்பட்டதைவிட 84வீத அதிகரிப்பு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் போக்குவரத்து விலைகளை மேலும் திருத்துவதற்கு அமைச்சு இணக்கம் தெரிவித்த போதிலும், அவற்றை நிராகரிக்க இந்த சங்கம் உரிமம் பெறவும், பணிக்கு வராது பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

மேலும், இதுவரை எரிபொருள் போக்குவரத்துக் கான அனுமதிப்பத்திரம் பெறாத மற்றும் புதிய வாகன உரிமையாளர்களுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் புதிய அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி பிற்பகல் வரை 384 எரிபொருள் பௌசர்கள் மற்றும் புகையிரதங்களில் எரிபொருள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ஒட்டோ டீசல், சுப்பர் டீசல், ஒக்டேன் 92 பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் மொத்த விநியோகம் தொடர்ந்து சந்தைக்கு போதியளவு விநியோகிக்கப்பட்டது. எவ்வாறாயினும், தனியார் எரிபொருள் தாங்கி சாரதிகள் கடந்த 30ஆம் திகதி நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும், கடந்த 1ஆம் திகதி கொலன்னாவ முனையில் எண்ணெய் சேமிப்பு வளாகத்தில் தனியார் எரிபொருள் பௌசர்கள் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், எரிபொருளை ஏற்றிச் சென்ற புகையிரதம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் கொலன்னாவை முனையிலிருந்து புறப்பட்டுச் செல்வதைக் காணமுடிந்தது.

# மக்களுக்காக மக்கள் பக்கம் நின்று சரியான திசையில் பயணிக்கின்றோம்

## இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான்

(க.கிஷாந்தன்)



அன்று முதல் இன்றுவரை கொள்கை அடிப்படையிலேயே காங்கிரஸ் பயணிக்கின்றது. சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்ட காங்கிரஸின் உயரிய தலைவர்கள் காட்டிய வழியில் இருந்து நாம் மாறவில்லை. மக்களுக்காக மக்கள் பக்கம் நின்று, சரியான திசையில் முன்னோக்கி பயணிக்கின்றோம் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இ.தொ.காவின் மே தினக் கூட்டம் கொட்டகலை சி.எல்.எப். வளாகத்தில் நேற்றுமுன்தினம் (01) நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய செந்தில் தொண்டமான் மேலும் கூறுகையில்,

"இலங்கை தொழிலாளர் காங்கிரஸை எவராலும் அசைத்துவிடவும் முடியாது, அழித்துவிடவும் முடியாது. அமைச்சு பதவிகளுக்காக நாம் பேரம் பேசவில்லை. கடந்த காலத்தில் ஆளுங்கட்சியில் ஐந்து ஆண்டுகளாக சிலர் அரங்கேற்றியதுபோன்று இராஜினாமா கூத்துகளை நாம் அரங்கேற்றவில்லை. கட்சி கலந்துரையாடி முடிவை எடுத்தது. அரசிலிருந்து காங்கிரஸ் கம்பீரமாக வெளியேறியது.

பாரத பிரதமர் நரேந்திர மோடி, மலையகத்துக்கு வந்தார். எம்மை நேரில் வந்து சந்தித்தார். தற்போது தமது பிரதிநிதிகளை அனுப்பி வைத்துள்ளார். மலையக மக்களுடன் நாங்கள் இருக்கின்றோம் என்ற செய்தியை பாரத பிரதமர் எங்களுக்கு வழங்கியுள்ளார். பல கூட்டங்களை இரத்து செய்துவிட்டு, மலையக மக்களுக்காக இங்குவந்த பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலைக்கு எங்கள் நன்றிகள்" - என்றார்.



சர்வதேச மே தினத்தை முன்னிட்டு ஹட்டன் ப்றொடெக்ட் (வீட்டு வேலை பணிப்பெண்கள் சங்கம்) சங்கத்தினரால் வீட்டுத்தொழிலாளர்களின் உரிமைகளை சட்டப்பூர்வமாக்கக்கோரி நேற்று முன்தினம்(01) மேற்கொள்ளப்பட்ட பேரணியை காணலாம். (கினிகத்தேனை செய்தியாளர்)

# சஜித்தால் மட்டுமே மலையகத்தின் உரிமைகளை மீட்டெடுக்க முடியும்

## மே தின உரையில் வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு களாக செயல்பட்டுவந்த பெருந்தோட்ட மக்கள் இன்று வஞ்சிக்கப்பட்டு கொண்டிருக்கின்றார்கள். சுதந்திரமான ஒரு மே தினக் கொண்டாட்டத்தை இன்றைய நாளில் எம்மால் கொண்டாட முடியவில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் கொழும்பில் நேற்றுமுன்தினம்(01) நடைபெற்றது.

இதன்போது கலந்து கொண்டு கருத்து கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் திருந்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

பொய்யான தேர்தல் வாக்குறுதிகளால் எம் மக்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள். தேர்தல் மேடைகளில் காடு மலை ஏறி வாக்குறுதிகளை அள்ளி இரைத்த ஒரு சில அரசியல்வாதிகள் இன்று மௌனம் காக்கிறார்கள். ஆயிரம் ரூபா சம்பளம் என்பது எட்டாக்கனியாகவே இன்றளவும் காணப்படுகின்றது.

காலையிலிருந்து சிரமத்திற்கு மத்தியில் கொழுந்து கூடைகளை முதுகில் சுமந்தபடி தொழில் புரிந்து மாலையில் பால்மாவிற்கும் எரிவாயுவுக்கும் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவல நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை மாற வேண்டும். மலையக மக்களுக்கு பிரஜா உரிமையை பெற்றுக் கொடுத்த ரணசிங்க பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாசவால் மட்டுமே மலையக மக்களின் உரிமைகளையும் மீட்டெடுக்க முடியும். தொடர்ந்து மலையக மக்களின் காணி உரிமை, வீட்டுரிமை, தொழில் பாதுகாப்பு தொடர்பில் நானும் சஜித் பிரேமதாசவும் எமது ஆட்சியில் பல புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம். மலையக மக்களின் உரிமைக்குரல் ஐக்கிய மக்கள் சக்தியே என தெரிவித்தார்.



# பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் - நல்லை ஆதீன குரு முதல்வர் சந்திப்பு



(யாழ். நிருபர்)

பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை நேற்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடாற்றினார்.

அதனைத் தொடர்ந்து நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளை சந்தித்து கலந்துரை யாடினார். அதன்பின்னர் காலை 10.30 மணியளவில் இந்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தையும் பார்வையிட்டார்.

இதன்போது கலாசார மத்திய நிலையத்தின் அமைக்கப்பட்டிருக்கின்ற விசேட வசதிகள் தொடர்பாகவும் அதன் திறன்கள் தொடர்பாகவும் யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜ் விளக்கமளித்தார். இதன்போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான், யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நடராஜன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்காடு கிராமம் பற்றிய வரலாற்று நூல் வெளியீடு



(யாழ். நிருபர்)

இடைக்காடர் ஈஸ்வரன் எழுதிய 'இடைக்காடு எம் தாயகம் - வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (01) இடைக்காடு மகா வித்தியாலய மண்டபத்தில் ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நடைபெற்றது.

இடைக்காடு இணையத்தினால் வெளியிடப் பட்ட இந்நூலுக்கான வெளியீட்டுரையை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் செ.விஸ்வலிங்க மும் நயப்புரையை செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் நிகழ்த்தினர்.

நூலை ஓய்வுநிலை கல்வியியல் பேராசிரியர் க. சின்னத்தம்பி வெளியிட்டு வைக்க, இலங்கை வங்கியின் ஓய்வுநிலை முகாமையாளர் க. இலட்சுமண சர்மா பெற்றுக்கொண்டார்.

வண்ணப் புகைப்படங்கள் பலவற்றுடன் நூறு பக்கங்கள் கொண்ட இந்நூல் கலந்துகொண்ட அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு பிரதேசத்திலுள்ள வாவெட்டி மலை என்ற இடத்திலிருந்து இடம்பெயர்ந்த வர்களே வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் குடியேறி இடைக்காடு என்ற ஊரை ஆக்கியதாக இந்நூல் குறிப்பிடுகிறது.

ஓட்டுச்சுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், புதூர் நாகதம்பிரான் ஆலயம் முதலியன இடைக்காட்டைச் சேர்ந்தவர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்களாகும்.

வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரி இடைக் காட்டைச் சேர்ந்த நாகமுத்து இடைக்காடரால் நிறுவப்பட்டது. இவரே இலங்கையில் நீலகண்டன் என்ற நாவலை எழுதிய முன்னோடியும் ஆவார். முன்னாள் அரச அதிபர் மாணிக்க இடைக்காடர் தனது கிராமத்துக்காக பல சேவைகளை செய்து அதை உயர்த்தி வைத்தவராவார். இவ்வாறாக இடைக்காடு மக்களின் பெருமைகளை ஆவணப்படுத்துவதாக இந்நூல் வெளிவந்துள்ளது.

இந்நிகழ்வில் இடைக்காட்டுடன் தொடர்புடைய உயர் உத்தியோகத்தர்கள் மற்றும் வன்னியில் வாழ்பவர்கள் என நூற்றுக்கணக்கானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தனர்.

# ஓமந்தையில் கைதுசெய்யப்பட்டவர்களிடம் ஆவா குழுவின் பதாகைகள் மீட்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் கைதுசெய்யப் பட்டவர்களிடம் ஆவா குழுவின் பதாகைகள் மீட்கப்பட்டதுடன், 16 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தை, கோதாண்டர் நொச்சிக் குளம் பகுதியில் ஆவா குழு என பெயரிடப்பட்ட பதாகை களுடன் 40இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் நேற்று முன்தினம் (01) மாலை கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர்கள் குறித்த பகுதிக்கு சென்றபோது சிலர் தப்பியோடி இருந்ததுடன், 16 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஆவா குழு வவுனியா என பெயரிட்ட பதாகைகளுடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்டி ருந்ததுடன், கூரிய ஆயுதங்களையும் தம்வசம் வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்ட 16 பேரும் ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கூரிய ஆயுதங்கள், பதாகைகள், கைத்தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் வவுனியா மருதங்குளம், அரசன்குளம், கோவில்குளம், கோழியாகுளம், சாஸ்திரி கூழாங்குளம், நெளுக்குளம், ஓமந்தை மற்றும் முல்லைத்தீவு, தலைமன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த 18 தொடக்கம் 26 வயதிற்குட் பட்ட இளைஞர்கள் எனவும், இருவர் 44 மற்றும் 45 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 8 பேர் வவுனி யாவைச் சேர்ந்தவர்கள், நால்வர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள், இருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் கள், ஒருவர் யாழ்ப்பாணத்தையும் இன்னுமொருவர் மன்னாரைச் சேர்ந்தவர் எனவும் தெரியவருகிறது.



## பொருளாதார நெருக்கடி காரணமாக 5 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்



(வவுனியா நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளா தார நெருக்கடி காரணமாக வவுனியாவிலிருந்து மேலும் ஐந்து பேர் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளனர்.

வவுனியாவின், சிதம்பரபுரம் பகுதியைச் சேர்ந்த ராஜலெட்சுமி, தயாளன், லதா மற்றும் அவரது ஆறு வயது மகள் தன்ஷிகா, 2 மாத கைக் குழந்தை தக்ஷரா ஆகியோரே இவ்வாறு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

குறித்த குடும்பமானது, நேற்று முன்தினம் (01) நள்ளிரவு யாழ்ப்பாணம் - நெடுந்தீவு கடற்கரை யிலிருந்து புறப்பட்டு நேற்று (02) அதிகாலை 2 மணியளவில் ராமேஸ்வரம் பகுதிக்கு அடுத்துள்ள சேராங்கோட்டை கடற்கரையை சென்றடைந்துள்ளது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் மெரைன் பொலிஸார் இலங்கைத் தமிழர்களை மீட்டு மண்டபம் மெரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் விசாரணைக்குப் பின் ஐந்து பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட் டுள்ளார்கள்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளா தார நெருக்கடி காரணமாக 80 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றடைந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.

# மீசாலையில் பாடசாலை அதிபர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

பாடசாலை அதிபர் ஒருவர் நேற்று (02) அதிகாலை வேளையில் மீசாலை கிழக்கிலுள்ள அவரது வீட்டு காணிக்குள் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பூநகரி பகுதியைச் சேர்ந்த ஆரம்பப் பிரிவு பாடசாலை ஒன்றின் அதிபரான 48 வயதான து.அருந்தசீலன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த அதிபரது சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணை களுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணை களை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





காலி முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கம, மைனா கோ கம ஆகியவற்றில் அரசுக்கு எதிராக நேற்று (02) போராட்டம் மேற்கொள்ளப்பட்டதை படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# அரசியல்வாதிகளின்

# மே தின முழக்கம்

## ராஜபக்ஷக்களை குப்பைத் தொட்டியில் எறியும் நாள் தொலைவில் இல்லை

### அநுர குமார திசாநாயக்க



இந்த நாட்டு மக்கள் ராஜபக்ஷக்களை காலால் மிதித்து குப்பைத்தொட்டியில் எறியும் நாள் வெகுதொலைவில் இல்லையென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க மே தின உரையில் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் (01) இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றியதாவது, "சகோதரர்கள் நால்வர் தங்களுக்கிடையில் அதிகாரத்தை பகிர்ந்துகொள்வதற்கு போட்டியிடுகின்றனர். அவர்களால் உருவாக்கப்படுவதாகக் கூறப்படும் இடைக்கால அரசை மக்கள் கேலிக்கையாக பார்க்கின்றனர்.

அரசியலமைப்பை காரணங்காட்டி தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்கே ராஜபக்ஷமார் விரும்புகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்கு தெரிவாகி 52 ஆண்டுகளாகின்றன. அவர் தொடர்ச்சியாக மே தின கூட்டங்களில் கலந்துகொண்டிருக்கிறார். ஆனால், இன்று அவரை காணவில்லை. அவரால் மக்களுக்கு முகங்கொடுக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது. தொழிலாளர்களின் தலைவன் என போற்றப்பட்ட அவரது நிலை இன்று என்னவாகியிருக்கிறது.

அலரிமாளிகையில் ஒளிந்துகொண்டிருக்கிறார். நிலக்கீழ் அறையில் அமர்ந்து பிரித் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

கிராமத்துடனான கலந்துரையாடல் நடத்துவதற்காக ஒவ்வொரு சனிக்கிழமையும் அநுராதபுரத்துக்குச் செல்லும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிலை என்ன? அவரால் மக்கள் சந்திப்புகளை நடத்த முடியாது.

கட்சி, இன, மத, தொழிற்சங்க வேறுபாடுகளின்றி ராஜபக்ஷக்களை மக்கள் புறக்கணிக்கின்றனர்" என்றார்.

## ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக இடமளியோம்

### தினேஷ் குணவர்தன



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பதவி விலக ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென அமைச்சர் தினேஷ் குணவர்தன மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொழிற்சங்கத்தின் மே தினக் கூட்டம் நுகேகொடையில் இடம்பெற்றபோது அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஜனாதிபதியையும் பிரதமரையும் பதவி விலக வேண்டாம் என நுகேகொடையில் திரண்ட மக்கள் தெரிவித்தார்கள். மக்கள் ஆணையை பாதுகாப்போம், சவால்களை வெற்றிகொள்வோம் என்ற தொனிப்பொருளில் இடம்பெறும் மே தினக் கூட்டம் அரசாங்கத்துக்கான ஆதரவை வெளிப்படுத்தியிருக்கிறது.

இதற்கு முன்னொரு தடவை ராஜபக்ஷ அரசாங்கம் பின்வாங்கியது. எனினும், மீண்டும் எழுந்து மக்கள் சேவைக்காக ஆட்சியமைத்தது. ஜனாதிபதியையோ பிரதமரையோ பதவி விலக நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அதற்காகவா நாம் ஆட்சியமைத்தோம்? மக்கள் எமது பக்கமே இருக்கிறார்கள்" எனத் தெரிவித்தார்.

## பெரமுனவின் உறுப்பினர்களுக்கு வீதிக்கு இறங்க முடியாத நிலை

### தயாசிறி ஜயசேகர



கூட்டணி அரசாங்கம் அமைக்கப்பட்டபோது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஏனைய பங்காளிக் கட்சிகளுக்கு மதிப்பளிக்கவில்லை. அவர்கள் இன்று வீதிக்கு இறங்க முடியாத நிலைமைக்கு அதுவும் ஒரு காரணம் - என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் (01) இடம்பெற்ற மே தின நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தன்னிச்சையான மற்றும் முட்டாள்தனமான தீர்மானங்களின் விளைவை அரசாங்கம் தற்போது எதிர்கொள்கிறது.

கூட்டணியிலான அரசாங்கத்தில் பொதுஜன பெரமுன ஏனைய கட்சிகளின் கருத்துக்கு மதிப்பளிக்கவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்து அரசாங்கத்தை ஸ்தாபித்தோம். அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைவதற்கு முன்னர் அரச தலைவர்கள் கூட்டணியின் ஏனைய கட்சிகளுடன் எவ்வித பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுக்கவில்லை.

பொதுஜன பெரமுன ஏனைய கட்சிகளின் கருத்துகளுக்கும், ஆலோசனைகளுக்கும் மதிப்பளிக்கவில்லை. பெரும்பான்மைப் பலம் எம்மிடம் உள்ளது என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு அக்கட்சி செயற்பட்டது. அரசாங்கத்தின் தன்னிச்சையான மற்றும் முட்டாள்தனமான தீர்மானங்களும் செயற்பாடுகளும் முழு நாட்டுக்கும் சாபமாக மாறியுள்ளன.

நாட்டுமக்கள் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது அரசியலில் ஈடுபடாத ஒருவரை ஜனாதிபதியாக கொண்டுவர வேண்டுமென குறிப்பிட்டார்கள். தற்போது அதே மக்களே ''கோ ஹோம் கோட்டா'' என நாடுதழுவிய ரீதியில் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகவும் வெறுக்கத்தக்க வகையில் சபையில் செயற்படுகிறார்கள். பெண்களையும், நாடாளுமன்ற கோட்பாடுகளையும் அவமதிக்கும் வகையில் எதிர்த்தரப்பினர் எது கதைத்தாலும் அதற்கு பின்னால் இருந்துகொண்டு கூச்சலிட்டு எதிர்ப்புத் தெரிவிப்பதே இவர்களின் பிரதான கடமையாக உள்ளது. இவ்வாறானவர்களை மக்கள் இனியும் தெரிவுசெய்யக் கூடாது" - என்றார்.

## லிபியாவின் நிலை நாட்டுக்கு ஏற்படும்

### விமல் வீரவங்ச



நாட்டுமக்கள் பொறுமையாக இருக்க முடியாமல் வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடத்துகின்றனர். அந்தப் போராட்டங்கள் கோபமான நிலைக்கு வழிவகுக்குமானால் லிபியாவுக்கு நடந்ததே நமது நாட்டுக்கும் நடக்கும் - என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச மே தின உரையில் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நேற்றுமுன்தினம் (01) இடம்பெற்ற அக்கட்சியின் மே தினக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு அரசாங்கத்தின் தவறான தீர்மானங்களும் காரணமாகும். அரசாங்கம் தவறான தீர்மானங்களை எடுக்கும்போது அதுதொடர்பில் அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு எதிர்ப்பு வெளியிட்டு வந்தோம்.

எனினும், எமது பேச்சுகள் எடுபடவில்லை. தொடர்ந்து தவறான தீர்மானங்களை எடுக்க ஆரம்பித்தபோது கடந்த மார்ச் 02ஆம் திகதி அரசாங்கத்திலிருந்து வெளியில் வந்து, அரசாங்கத்தின் தவறுகளை மக்கள் முன்னிலையில் பேச ஆரம்பித்தோம்.

மக்கள் இன்று அன்றாடம் வாழ்வதற்கு வழியின்றி கஷ்டப்படுகின்றனர். அவர்களால் தொடர்ந்து பொறுமையாக இருக்க முடியாமலே வீதிக்கு இறங்கி இருக்கின்றனர். அரசாங்கம் பதவி விலகி புதிய ஆட்சி ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்றே மக்கள் கோருகின்றனர்.

மக்களின் கோரிக்கையை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். மக்களின் இந்தப் போராட்டம் கோபத்துடன் மேற்கொள்ளப்படும் போராட்டமாக மாறுவதற்கு நாங்கள் இடமளிக்கக்கூடாது.

கோபத்துடன் மேற்கொள்ளப்படும் போராட்டம் நாட்டை அராஜக நிலைக்கே கொண்டுசெல்லும்.

அந்த நிலைக்குச் செல்ல இடமளிக்கக்கூடாது. இந்தப் பிரச்சினை நீடிப்பதற்கு இடமளிக்காமல் மக்களின் கோரிக்கைக்கு தீர்வுகாண முன்வரவேண்டும். இதனை அரசியல் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீது எமக்கு மரியாதை இருக்கின்றது. வெற்றிகொள்ள முடியாத யுத்தத்தை வெற்றிகொள்வதற்கு அவரின் தலைமைத்துவம் பிரதான காரணமாகும்.

யுத்த வெற்றியின் கௌரவம் அவருக்கு இருக்கின்றது. என்றாலும் தற்போது நாட்டு மக்களின் கோரிக்கை என்ன என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்" - என்றார்.

## இன்னும் ஓரிரு மாதங்களில் ராஜபக்ஷக்கள் தப்பியோடுவர்

### - சரத் பொன்சேகா



மக்கள் போராட்டங்கள் தொடரும் நிலையில், ராஜபக்ஷக்கள் இன்னும் ஓரிரு மாதங்களில் நாட்டைவிட்டு தப்பியோடிவிடுவார்கள் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

"இந்த ஆட்சி தேவையில்லை, ஆட்சியாளர்கள் கிராமங்களையும் அமைக்கவேண்டியதில்லை. கோட்டா கோ கிராமம், மைனா கோ கிராமம், கப்புட்டா கோ கிராமம் மலர்ந்துவிட்டன. இனி ஷிராந்தி கோ கிராமம், நாமல் கோ கிராமம் என்பனவும் உருவாகும். எனவே, இன்னும் ஓரிரு மாதங்களில் ராஜபக்ஷக்கள் நாட்டைவிட்டு தப்பியோடிவிடுவார்கள். அவர்கள் எந்த நாட்டுக்குச் சென்றாலும் நாம் கண்டுபிடிப்போம். மக்களிடம் கொள்ளையடித்த பணத்தை கொண்டுவருவோம். தவறிழைத்தவர்களுக்கு நிச்சயம் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும்" - என்றார்.

திகதி 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4749
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,769,400.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 5 4 7 0 9 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 17,124,623.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1241
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,453,800.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 3 9 6 5 5 3
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு
ரூ. 11,143,887.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 779
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,032,140.00
J 02 47 56 78
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 109,556,426.40

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0058
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,357,540.00
இலக்கினம் கடகம் வெற்றி இலக்கங்கள் 06 07 13 37
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,127,000.40

கோடி 24 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1097
ரூ. 2,454,820.00
ரூ. 250,120,806.00
C 19 01 34 42 56
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
Web : www.nlb.lk

# டிபெண்டர் - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலி

## குளியாப்பிட்டியவில் பதற்றம்





குளியாப்பிட்டிய, கனதுல்ல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் டிபெண்டர் வாகனமொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார்.

அதனையடுத்து, குறித்த டிபெண்டர் ரக வாகனத்தை பொலிஸார் எடுத்துச் செல்ல முயற்சித்தபோது அங்கிருந்த சிலர் டிபெண்டர் ரக வாகனத்தை தீயிட்டு அழித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த டிபெண்டர் ரக வாகனம் தீயினால் முழுமையாக சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் தந்தையொருவர் மற்றும் அவரின் 14 வயது மகனும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

14 வயது சிறுவன் டிபெண்டர் ரக வாகனத்தை செலுத்தியதாக உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்தேகநபர்கள் மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவத்தினால் குளியாப்பிட்டிய, கனதுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (01) பதற்ற நிலை ஏற்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குளியாப்பிட்டிய கனதுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை சந்தேகநபர்கள் நேற்று குளியாப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்த நிலையில், தலா 2 இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் மருத்துவப் பொருட்கள் கையளிப்பு



ஒரு தொகுதி மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவப் பொருட்கள், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவினால், சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமனவிடம் கொழும்பில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டது.

இந்திய மக்களின் அன்பளிப்பான இம்மருந்துப் பொருட்கள் துரிதமாக அனுப்பப்படுவதனை உறுதி செய்வதற்காக இந்திய கடற்படைக் கப்பலான கரியால் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பேராதனை போதனா வைத்தியசாலையால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, இம்மருத்துவப் பொருட்கள் விநியோகிக்கப் படுகின்றன. 2022 மார்ச் மாதம் வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தபோது இப்போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காணப்படுவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் மருத்துவ சேவைகளை வழங்கிவரும் பல்வேறு மருத்துவ நிறுவனங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் மேலும் பல மருந்துப்பொருட் தொகுதிகளை இந்தியாவிலிருந்து அனுப்புவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. அத்துடன், உணவுப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் போன்ற அத்தியாவசிய தேவைக்குரிய பொருட்களுக்கான ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி திட்டத்தின்கீழ் 200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவப் பொருட்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைய காலங்களில் இலங்கைக்கான தமது ஆதரவினை இந்தியா துரிதமாக விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்த அடிப்படையில், அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி, பெற்றோலிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி திட்டம், நாணய பரிமாற்று நடவடிக்கைக்காக 400 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு மற்றும் ஆசிய கணக்குத் தீர்வாக ஒன்றியத்திற்கான கொடுப்பனவுக்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், ஒட்டுமொத்த பொருளாதார உதவியானது 2022ஆம் ஆண்டில் மாத்திரம் கிட்டத்தட்ட மூன்று பில்லியன் அமெரிக்க டொலரை அண்மித்துள்ளது.

இந்நிலையில், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவித் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளதுடன் ஏனைய பொருட்களுக்கு புறம்பாக 16 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இக்கடன் உதவித்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

## இலங்கை – அவுஸ்திரேலிய உறவின் 75 ஆண்டு நிறைவு அனுஷ்டிப்பு





அவுஸ்திரேலியாவின் வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் வடக்கு மற்றும் தெற்காசியப் பிரிவுகளின் முதல் உதவிச் செயலாளர் கோரி கோவன் ஆகியோர் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தலைமையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளுடன் அண்மையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வைத்து கலந்துரையாடியிருந்தார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற இந்த சந்திப்பில், கொழும்புக்கும் கன்பராவுக்கும் இடையிலான இருதரப்பு ஈடுபாடுகளின் முழுமையான வரம்பு மற்றும் பரஸ்பர மற்றும் மூலோபாய நலன்கள் சார்ந்த நிலுவையில் உள்ள விடயங்களிலான எதிர்கால நடவடிக்கை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சமீபத்திய ஆண்டுகளில், ஒரு மூலோபாய மற்றும் கூட்டுறவுக் கூட்டாண்மையாக மாற்றப்பட்டு வருகின்ற கடந்த 75 ஆண்டுகளாக நிலவிவரும் பொருளாதார, வர்த்தகம், முதலீடு மற்றும் கலாசார உறவுகள் குறித்து அவுஸ்திரேலிய பிரதிநிதிகள் ஆழ்ந்த திருப்தியை வெளிப்படுத்தினர்.

கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பேரழிவால் முன்னெப்போதும் இல்லாத பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அழைக்கப்படுவதைக் கடக்கும் முகமாக, தனது நண்பர்களுடனான கொழும்பின் ஈடுபாடு மற்றும் பொருளாதார நிலைமையை வலியுறுத்தி, இலங்கையின் தற்போதைய நிலை குறித்த விரிவான விளக்கத்தை வெளியுறவுச் செயலாளர் தூதுக்குழுவினருக்கு வழங்கினார். இலங்கை சமூகத்தின் ஒரு பிரிவினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தமையினால் ஏற்பட்டுள்ள தற்போது நிலவும் கருத்து வேறுபாடுகள் குறித்தும் வெளியுறவு செயலாளர் தூதுக்குழுவிற்கு விளக்கமளித்தார். அரசியலமைப்பின் விதிகளுக்கமைய, எந்தவொரு தீர்வுக்கும் அரசாங்கமும் ஜனாதிபதியும் தயாராகவிருப்பதாக அவர் தெளிவுபடுத்தினார். ஆங்காங்கே நடைபெற்ற சில சம்பவங்கள் மற்றும் போராட்டக்காரர்களுக்கு எதிராக சட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளின் நடந்துகொண்ட முறைமை குறித்து கருத்துத் தெரிவித்த வெளியுறவுச் செயலாளர், குற்றவாளிகளை கையாள்வதில் நாட்டின் சட்டம் அதன் சொந்தமான போக்கைக் கையாளும் என்றும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டைப் பாராட்டிய விஜயம் செய்திருந்த தூதுவர், ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் காப்பதற்குமான நற்பெயரைக் கொடுத்துள்ள இலங்கை, ஜனநாயக வழிமுறைகள் மற்றும் கருவிகளின் மூலம் எதிர்ப்பாளர்களை கையாள்வதாகத் தெரிவித்தார். அவுஸ்திரேலிய அரசாங்கம் தற்போது இலங்கைக்கு இயலுமான முறையில் உதவுவதற்கு மாற்று வழிகளை ஆராய்ந்து வருவதாக அவர் உறுதியளித்தார்.

எல்லை இடர் மதிப்பீடு, கப்பல் கண்காணிப்பு, ஆட்கடத்தல் மற்றும் ஏனைய நாடுகடந்த குற்றங்களைத் தடுப்பது ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மற்றும் ஒத்துழைப்பை இரு தூதுக்குழுக்களும் ஒப்புக்கொண்டதுடன், ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மானங்களை முழுமையாக செயற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஈடுபாடுகளை தீவிரப்படுத்துவதற்குத் தீர்மானித்தன.

“கடல் பேரிடர் தயார்நிலை பொறிமுறை” முன்முயற்சியின் மூலம் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றங்களை இரு தரப்பினரும் மீளாய்வு செய்ததுடன், முன்முயற்சியின் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கும் ஒப்புக்கொண்டனர். மனித உரிமைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்கள் குறித்து விஜயம் செய்திருந்த உதவிச் செயலாளர் கோவன், உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலி மற்றும் அவரது தூதுக்குழுவினருக்கு வெளியுறவுச் செயலாளர் புதிய தகவல்களை வழங்கினார்.

1947 ஏப்ரல் 29ஆம் திகதி இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பே இலங்கையும் அவுஸ்திரேலியாவும் முறையான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தின.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடல்களில் பங்குபற்றினர்.




இலங்கை மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்குமாறு கோரியும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பதவி விலக வேண்டுமென வலியுறுத்தியும், மே தினமான நேற்று முன்தினம் (01) ஐக்கிய இராச்சியத்தின், லண்டனிலுள்ள இலங்கையர்களால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

## இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை பல்பொருள் அங்காடிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை

நாடு பூராகவுமுள்ள சதொச நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொகையை, இலங்கையின் அனைத்து பல்பொருள் அங்காடி விற்பனை நிலையங்களுக்கும் விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

வர்த்தக மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவிற்கும், பல்பொருள் அங்காடிகள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலின்போதே இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இதனை தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அதன்படி அடுத்த வாரம் முதல் பல்பொருள் அங்காடிகள் மூலம் நுகர்வோருக்கு குறைந்த விலையில் அரிசியை விநியோகிக்கக்கூடியதாக இருக்கும்.

இதன்போது நுகர்வோர் ஒருவருக்கு அதிகபட்சமாக 5 கிலோகிராம் அரிசி மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும்.

அதற்கமைய, விநியோகிக்கப்படும் அரிசி வகைகளின் சில்லறை விலையாக ஒரு கிலோகிராம் நாட்டரிசி 145 ரூபாவுக்கும் ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 175 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையினைக் கருத்திற்கொண்டு இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியால், தொழிலாளர் தின நிகழ்வினை மே தினப் பிரார்த்தனை நிகழ்வாக பதுளை மாப்பாகலை பெருந்தோட்டப் பிரிவில் நேற்று முன்தினம் (01) அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் நிதிச் செயலாளர் இராஜநாயகம் சலோபராஜா தலைமையில் நடைபெற்ற மே தினப் பிரார்த்தனை நிகழ்விற்கு சமூக நலன்விரும்பிகள் மற்றும் பெருந்தோட்டவாழ் பொதுமக்களும் மதவேறுபாடின்றி கலந்துகொண்டனர். (பதுளை நிருபர்)

## நல்லமல்களில் நம்பிக்கை வைத்து நாட்டு நிலைமைகள் நீங்க பிரார்த்திப்போம்

### அமைச்சர் நஸீர் அஹமட் ஈகைத் திருநாள் வாழ்த்து



அருள்பொழிந்த புனித மாதத்தில், நாம் செய்த நல்லமல்கள் இன்னும் இதர நற்செயல்களை எல்லாம்வல்ல அல்லாஹ்ஹுத்தஆலா பொருந்திக் கொள்ள பிரார்த்திப்பதாக சுற்றாடல் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

நோன்பு பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளதாவது,

நோன்பு என்பது ஒரு முஸ்லிமை இறைநம்பிக்கையில் புடம்போட்டு அவனது ஈமானை பட்டைத் தீட்டுகிறது. நோன்பின் மகத்துவம் பற்றி பெருமானாரின் அறிவிப்புகள் பல உள்ளன. இதன் இரகசியங்களை அல்லாஹ் மட்டுமே அறிந்தவனாக இருக்கிறான். இவ்வளவு பெறுமதிமிக்க புனித மாதம் எம்மைக் கடந்து விட்டது. இருந்தாலும், இம்மாதத்தில் நாம் பெற்ற ஈமானியப் பயிற்சிகளூடாக ஏனைய மாதங்களை கழிப்பதற்கு வல்ல நாயன் "அல்லாஹ்" அருள்பாலிப்பானாக.

இவ்வாறு, நாம் பிரார்த்திப்பதுடன் நின்றுவிடாது, நமது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் நீங்கவும் நாம் பிரார்த்திக்க வேண்டும். மக்கள் எல்லோரும் அனுபவிக்க நேர்ந்துள்ள இந்த நெருக்கடிக்கு, எவராலும் தனியாக நின்று தீர்வுகாண இயலாது. தனிப்பட்ட ரீதியில், எவரது தலையிலும் இதை சுமத்துவதோ, அல்லது பொறுப்பேற்குமாறு கோருவதோ சமூகப்பொறுப்பை மீறுவதாக அமையும்.

எனவே கட்சி, அரசியல் என்ற பேதமின்றிப் பிரியாமல், கூட்டாகப் பணியாற்றி எமது மக்களின் துயர் போக்க சகலரும் முன்வர வேண்டும். இந்த மனநிலைகள் ஏற்படுவதற்காக நாம், இந்தப் பெருநாளில் பிரார்த்திப்பது அவசியம்.

கூட்டுப்பொறுப்பும் பொது நலமும்தான் இந்த நிலைமைகளை விரட்டியடிக்கும். இந்தப் பொறுப்பிலிருந்து விலகி நடப்பது, விசுவாசிச் சமூகமான எமக்கு பொருத்தமுடையதல்ல. எனவே, நமது நல்லமல்களில் நம்பிக்கை வைத்து நாட்டு நிலைமைகள் நீங்கப் பிரார்த்திப்போமாக.

இன்று பெருநாளை கொண்டாடும் முஸ்லிம் சகோதரர்களுக்கு ஈத்முபாறக் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

# சாய்ந்தமருது விலங்கறுமனையிலிருந்து இரவில் துர்நாற்றம் வீசுவதாக பிரதேசவாசிகள் விசனம்

## திடீர் களவிஜயத்தில் வெளியான உண்மைகள்







(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருதில் சில நாட்களாக பிந்திய மாலைப் பொழுது முதல் அதிகாலை நேரம் வரை பலத்த துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த சாய்ந்தமருது ஜும்மா பெரியபள்ளிவாசல் நிர்வாகிகள், பிரதேசவாசிகள் இந்த துர்நாற்றம் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் விலங்கறுமனையிலிருந்து வருவதாகவும், மாட்டின் என்புகள் மற்றும் மாட்டின் தோலை தீயிட்டு அழிப்பதனால் வரும் துர்நாற்றம் என்றும் தெரிவித்ததுடன், இந்த துர்நாற்றம் காரணமாக குடியிருப்பு பிரதேசங்களில் நாங்கள் பலத்த சங்கடங்களை அனுபவிப்பதாகவும் இது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு அறிவித்தும் பயனில்லை என்றும் சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய குறித்த விலங்கறுமனைக்கு திடீரென களவிஜயம் மேற்கொண்டு பார்வையிட்டபோது, இந்த விலங்கறுமனையில் மாடுகளை அறுக்கும் இடம் சுத்தமாக இருந்ததுடன், உப்பு மற்றும் இரசாயனப் பதார்த்தங்களை கொண்டு மூன்று மாதமளவில் சேர்க்கப்பட்ட தோலை பதப்படுத்தி வைத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. அதுமட்டுமின்றி, மலைபோன்று குவித்து வைத்திருக்கும் என்புகளை இயந்திரங்களைக் கொண்டு தூளாக்கி வைத்திருந்த குறித்த விலங்கறுமனை ஊழியர்கள், அதனை கோழித்தீனி தயாரிக்க ஏற்றுமதி செய்யவுள்ளதாக தெரிவித்தனர். இந்த தோல்கள் குறித்த விலங்கறுமனையில் அறுக்கப்பட்ட மாடுகளிலிருந்து பெறப்பட்டவை மட்டுமின்றி மட்டக்களப்பு முஸ்லிம் பிரதேசங்களிலிருந்தும் வாகனங்களில் தருவித்து லெதர் ஏற்றுமதிக்காக பதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். அங்கு தோல்கள் வெயிலில் உலரவிடப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

குறித்த விடயம் தொடர்பில் விலங்கறுமனை உரிமையாளரான மீராசாஹிப் அஷ்ரபை ஊடகங்கள் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டபோது, 13 வருடங்களாக இந்த பணியை வெற்றிகரமாக செய்துவருகிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களும், அவர்களின் தேவைகளை செய்வதற்கு நான் தடையாக இருப்பதாக எண்ணுபவர்களும் இப்படியான கதைகளை அடிக்கடி பரப்புவது வழக்கம். அபியா தனியார் கூட்டுநிறுவனத்தின் துணைநிறுவனமான ஹலால் விலங்கறுமனை சாய்ந்தமருதில் இயங்கி வருகிறது. கடந்த காலங்களில் சுகாதாரத்துறையினரின் நேரடி விஜயத்தின் பின்னரான ஆலோசனைகளின் பிரகாரம் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இந்த விலங்கறுமனை சிறப்பாக இயங்கி வருகிறது.


விலங்கறுமனை நடவடிக்கைகளை ஒழுங்காக செய்வதற்கு சோடியம் சல்பேட் எனும் இரசாயன பொருளை பயன்படுத்தி வருகின்றோம். இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பற்றாக்குறை காரணமாக அந்த இரசாயன பொருளை இறக்குமதி செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும் இறக்குமதி செய்யப்பட்ட சோடியம் சல்பேட் எனும் இரசாயனப்பொருள் துறைமுகத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் தாண்டியும் நாங்கள் மாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு சுகாதார வழிமுறைகளின்படியே இந்த விலங்கறுமனை நடவடிக்கைகளை ஒழுங்காக செய்து வருகிறோம். இரவு நேரங்களில் வரும் துர்நாற்றம் உண்மையே. ஆனால் அது எங்கள் விலங்கறுமனை நடவடிக்கை மூலம் ஏற்படுவதல்ல. மாலை நேரங்களில் முறையற்ற விதமாக ஆற்றோரங்களில் கொட்டப்படும் கோழி கழிவுகளினால் ஏற்படுவது. இரவு நேரங்களில் ஆவியிர்ப்பு நடவடிக்கை நடைபெறும்போது துர்நாற்றம் வீசுகிறதாக நினைக்கிறேன். எனது விலங்கறுமனை ஊரிலிருந்து பல கிலோமீற்றர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் சுகாதாரத்தரப்பினர் நேரடியாக எங்களின் விலங்கறுமனைக்கு வந்து பரிசோதனை செய்து அவர்கள் முன்வைக்கும் தீர்வை ஏற்று அதன்படி நடக்க நான் தயாராக இருக்கிறேன் என்றார்.


குறித்த விலங்கறுமனை நடவடிக்கைகள் மூலம் தினமும் 40 மாடுகள் அளவிலும், வெள்ளிக்கிழமை மற்றும் பெருநாள் தினங்களில் 60 மாடுகள் அளவிலும் அறுக்கப்படுவதாகவும் மாட்டின் தோல், என்பு, சாணம் போன்ற சகல பகுதிகளும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கும் ஹலால் விலங்கறுமனை நிர்வாகத்தினர் பணமீட்டும் மூலப்பொருட்களை தீயிட்டு அழிக்க நாங்கள் முட்டாள்கள் இல்லை என்கின்றனர். கடந்த காலங்களில் தொழில் போட்டி மற்றும் வேறுபல காரணங்களினால் வாகனமொன்றும் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவமும் ஹலால் விலங்கறுமனை பணிப்பாளர் மீராசாஹிப் அஷ்ரபின் சொந்த வாகனம் தாக்கப்பட்ட சம்பவமும் நடைபெற்றுள்ளதாக அறிய முடிகிறது.

இந்த விடயம் தொடர்பில் கல்முனை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி ஜே.கே.எம். அர்சத் காரியப்பரை ஊடகங்கள் சந்தித்து கேள்வியெழுப்பியபோது, கல்முனை மாநகர சபை நிர்வாகத்தினால் செய்யவேண்டிய இந்த விலங்கறுமனையை வளப்பற்றாக்குறை மற்றும் பல காரணங்களினால் தனியார் ஒருவர் செய்துவருகிறார். குறித்த துர்நாற்ற விவகாரம் தொடர்பில் நானறிந்துள்ளேன்.

துரதிர்ஷ்டவசமாக எழுத்துமூல முறைப்பாடுகள் என்னுடைய கைக்கு இதுவரை கிட்டவில்லை. கல்முனை முதல்வரின் பூரண ஒத்துழைப்பும், இந்த பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய வளங்களும் கிடைத்தால் நிரந்தரத்தீர்வை வழங்கி இந்த பிரச்சினையை தீர்க்க தயாராக உள்ளதாக தெரிவித்தார். தனது சேவைக்காலத்தில் கல்முனை மாநகர சபையில் சிறப்பாக பணியாற்றி பலரதும் பாராட்டை பெற்ற கல்முனை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி ஜே.கே.எம்.அர்சத் காரியப்பர், கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப், கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள், சுகாதாரத்துறை அதிகாரிகள் தலையிட்டு இந்த பிரச்சினைக்கு தீர்வை வழங்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

# பெற்றோல் பௌசர் சாரதிகள் பணிப்புறக்கணிப்பு; திருமலையில் எரிபொருள் விநியோகம் பாதிப்பு





(திருகோணமலை நிருபர்)

பெற்றோலிய கூட்டுத்தாபன தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் லங்கா இந்தியன் ஓயில் நிறுவன தனியார் பௌசர் சாரதிகளும் இணைந்துகொண்டு பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி, திருகோணமலை ஐ.ஓ.சீ. நிறுவனத்தின் அனைத்து பௌசர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எரிபொருள் விலை அதிகரிப்பிற்கேற்ப போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை பெற்றோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கம் கடந்த 30ஆம் திகதி நள்ளிரவு முதல் சேவையிலிருந்து விலகியுள்ளது.

இந்த வேலைநிறுத்தம் காரணமாக நேற்று (02) திருகோணமலை ஐ.ஓ.சீ. நிறுவனத்தின் எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# முழு இறை திருப்தியோடு நோன்புப் பெருநாளை கொண்டாடும் உள்ளங்களுக்கு இனிய வாழ்த்துகள்

## அ.இ.ம. காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் அப்துல்லா மஹ்ரூப்

(கிண்ணியா நிருபர்)

உலக வாழ் முஸ்லிம்கள் தங்களின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான நோன்பை நோற்று முழு இறை திருப்தியோடு, பெருநாளை கொண்டாடும் அனைத்து உள்ளங்களுக்கும் இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துகள் என முன்னாள் பிரதியமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப் பாளருமான அப்துல்லா மஹ்ரூப் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

நாட்டில் நிலவிவருகின்ற பொருளாதார நெருக்கடி சூழ்நிலையிலும் முஸ்லிம்கள் பெரும் சோதனைகளுக்கு மத்தியில் நோன்புகளை நோற்று வந்ததுடன், உள ரீதியான பாதிப்புகளுக்கு முகங்கொடுத்து இன்றைய நோன்புப் பெருநாளை கொண்டாடுகிறோம்.

நாட்டு முஸ்லிம்கள் தங்களுடைய இருப்பை உறுதிப்படுத்தும் தீர்மானமிக்க காலப்பகுதியில் வாழ்ந்து வருகிறோம். இதனால் எமது சமூகத்தின் நிலை கருதி இந்நாளில் அனைவரதும் ஒற்றுமை என்றும் தொடர்ச்சியான நிலைபேற்றுடன் இருக்க வேண்டும்.



அல்குர்ஆன் அருள் பெற்ற மாதம், பத்ர் யுத்த தியாக வெற்றி போன்றவற்றை ஞாபகப் படுத்துகின்ற இம்மாதத்தில் நாம் செய்கின்ற நற்செயல்களுக்கு பல மடங்கு நன்மைகளை அல்லாஹ் எமக்கு அளிக்கின்றான். அத்தோடு நாம் செய்த தவறான விடயங்களுக்கு இம்மாதத்தில் பாவ மன்னிப்பை பெறுவதற்கான சந்தர்ப்பத்தை அல்லாஹ் எமக்கு ஏற்படுத்தியிருக்கிறான். அந்த வகையில் அல்லாஹ்வின் இறை கட்டளைக்கு அஞ்சி முகம்மது நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியான வழிகாட்டல்கலின் அடிப்படையில் நமது அனைத்து நடவடிக்கைகளையும் அமைத்து கொள்ளவேண்டும். இதிலே தான் இன்றைய காலகட்டத்தில் உலக வாழ் முஸ்லிம்கள் அல்லாஹ்வின் அருளைப் பெற முடியும்.

இலங்கையில் பல்லின சமூகமாக பல நூற்றாண்டுகள் வாழ்ந்துகொண்டுவரும் முஸ்லிம்கள் ஏனைய இனங்கள் மற்றும் சமயங்களைச் சேர்ந்த மக்களுடன் மிகவும் ஐக்கியமாகவும் அந்நியோன்யமாகவும் வாழ்ந்துவரும் இத்தருணத்தில், நாட்டில் அமைதியான சூழ்நிலை நீடித்து நிலைப்பதற்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்கும் பங்களிக்கும் வகையில் உறுதிகொள்வோம்.

நாட்டில் இன ஐக்கியமும் ஒற்றுமையும் இந்நாளில் மேலோங்குவதற்கு இறைவன் எமக்கு துணைபுரிய வேண்டும் என இறைவனை இத் தருணத்தில் பிரார்த்திக்கிறேன்.

# கிண்ணியா தள வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 15 இலட்சம் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள்




(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா தளவைத்தியசாலைக்கான ஒரு தொகை மருத்துவ உபகரணங்களை லயன்ஸ் கழகம் ஊடாக வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த உபகரணங்களானது லயன்ஸ் இன்டர் நெசனல் கழகம் 306 சீ1 ஏற்பாட்டில் மாவட்ட ஆளுநர் அமல் புசல்லகே தலைமையில் நேற்று (02) வைத்தியசாலைக்கு வழங்கிவைக்கப்பட்டன.

கிண்ணியா யுனைட்டட் கிளப்தலைவர் வைத்தியர் சமீமின் வேண்டுகோளுக் கிணங்க, சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களாக அதிதீவிர சிகிச்சை பிரிவுக்கான கட்டில்கள், ஒட்சிசன் கருவி உள்ளிட்ட பல பொருட்கள் வழங்கப்பட்டன.

இதன்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோருக்கான சுகாதாரப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், வைத்தியசாலை வளாகத்தினுள் மரநடுகையும் இடம்பெற்றது. இதில் கலாநிதி ஆனந்த மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனையில் சர்வமத இப்தார் நிகழ்வு




(மருதமுனை மேலதிக, கல்முனை நிருபர்கள்)

சமாதானமும் சமூகப்பணியும் அமைப்பின் அனுசரணையில் இயங்கும் அம்பாறை மாவட்ட பிரதேச நல்லிணக்க மன்றங்கள் ஒன்றிணைந்து இஸ்லாமியர்களின் புனித நோன்பினை முன்னிட்டு சகல இனத்தவரையும் ஒன்றிணைத்து நோன்பு திறக்கும் (இப்தார் நிகழ்வு) கல்முனையில் உள்ள தனியார் மண்டபமொன்றில் நடைபெற்றது.

பௌத்தம், இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க ஆகிய பல்லின சமூகத்தினர் இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட நல்லிணக்க மன்ற மாவட்ட இணைப்பாளர் எஸ்.எல்.அஸீஸ், கல்முனை நல்லிணக்க மன்ற இணைப்பாளர் வீ.தங்கவேல் ஆகியோரின் இணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திக, கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர் சமாதானமும் சமூகப்பணி நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் டி.தயாபரன், சமாதானமும் சமூகப் பணி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் டி.இராஜேந்திரன் உட்பட நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள், மாவட்ட நல்லிணக்க குழு இணைப்பாளர்கள், பிரதேச நல்லிணக்க மன்ற இணைப்பாளர்கள், கல்முனை, கல்முனைவடக்கு, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில், தமன, லகுகல, அம்பாறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நல்லிணக்க குழு உறுப்பினர்கள், பிரதேச நல்லிணக்க குழுவின் இளைஞர் யுவதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

இனங்களிடையே நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கு இவ்வாறான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டதாக பல்லின சமூகத்தினர் கலந்துகொண்ட நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வில் சமாதானமும் சமூகப்பணி நிறுவனத்தின் தேசிய பணிப்பாளருமான டி.தயாபரன் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இந்நிகழ்வின் ஆரம்பமாக அம்பாறை மாவட்ட நல்லிணக்கக் குழு உறுப்பினர்கள் கல்முனைப் பிராந்தியத்தில் உள்ள பௌத்தம், இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க ஆகிய நான்கு மதஸ்தலங்களுக்கும் நல்லிணக்க விஜயம் மேற்கொண்டனர்.

இதனடிப்படையில் ஆரம்பமாக கல்முனை இருதய நாதர் தேவாலயம், பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம், கல்முனை கடற்கரை பள்ளிவாசல், கல்முனை சுபத்ராராமய விகாரை ஆகியவற்றுக்கு விஜயம் இடம்பெற்றது.

குறித்த நான்கு மத ஸ்தலங்களுக்கு நல்லிணக்க குழு உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டதுடன், மத ஸ்தலங்களில் இடம்பெறும் சமய விடயங்கள் பற்றி இதன் போது மத போதகர்களால் விளக்கமளிக்கப் பட்டது. நான்கு மதஸ்தலங்கள் விஜயத்தின் மூலம் ஒவ்வொரு மதத்தினரின் சமய நடவடிக்கைகள் பற்றிய நல்லிணக்கக்குழு உறுப்பினர்கள் ஆர்வத்துடன் அறிந்துகொள்ளக்கூடியதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஜனநாயகம் தழைத்தோங்கி ஏழ்மைநிலை இல்லாதொழிய நோன்புப்பெருநாள் தினத்தில் முஸ்லிம்கள் பிரார்த்தியுங்கள்

## ரமழான் வாழ்த்துச் செய்தியில் அல் - மீஸான் பௌண்டேஷன்

(மாளிகைக்காடு நிருபர்)

நாடு கஷ்டத்தில் சிக்கி நாமெல்லாம் நடுவீதியில் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில் இஸ்லாம் கூறும் சமாதானம், நல்லிணக்கம், சகோதரத்துவம், பரஸ்பரத்தை பேணி எல்லா இலங்கையர்களும் உறுதியான மன நிம்மதியுடனும், விட்டுக்கொடுக்க முடியா சகோதரத்துவத்துடனும் வாழ்ந்து நிறைவான செல்வங்கள் ஓங்கி தன்னிறைவு பெற்ற தேசமாக இலங்கை உருப்பெற உழைக்கவேண்டிய தேவை இருக்கிறது. இதற்கான சக்தியை வழங்கிட எல்லா முஸ்லிம் சகோதரர்களும் இறைவனிடம் கையேந்தி பிரார்த்தியுங்கள் என அல்-மீஸான் பௌண்டேஷன் ஸ்ரீலங்கா விடுத்துள்ள நோன்புப்பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பெருநாள் செய்தியில் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை வாழ் முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக எமது நாட்டின் ஏனைய இனங்கள் மற்றும் சமயங்களைச் சேர்ந்த மக்களுடன் மிகவும் ஐக்கியமாக வாழ்ந்து வரும் இத்தருணத்தில் நாட்டில் இன்று நிலவும் அமைதியற்ற சூழ்நிலை சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவும் வகையில் அமைதியான நிலைமை உருவாக்கப்பட்டு, நாட்டின் இறையாண்மை பலப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் ரமழான் உணர்த்தும் உன்னதமான படிப்பினைகளை எமது வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம் ஒழுக்கமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

ஒற்றுமை என்னும் கயிற்றை நாம் இறுகப் பிடித்துக்கொள்வோமானால் எமக்கெதிரான சக்திகளை முறியடிக்க முடியும்.

எமது செயற்பாடுகளை நாங்கள் சீர்செய்து கொண்டு ஒழுக்கசீலர்களாக முன்மாதிரி மிக்க சமூகத்தினராக இருக்க வேண்டும். இதற்கான பாடங்களையும் ரமழான் எமக்கு செயற்பாட்டு ரீதியில் கற்றுத்தருகின்றது. இத்திருநாளில் சந்தோஷமாக பெருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் இனிய பெருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஈத் முபாரக். நாட்டில் இன நல்லிணக்கம், சமத்துவம் நீடிப்பதற்கும் முஸ்லிம்கள் எச்சந்தர்ப்பத்திலும் ஒற்றுமையாக இருப்பதற்கும் இத்திருநாளில் அனைவரும் பிரார்த்தனை செய்யவேண்டும் என்றுள்ளது.

# விடுதி கதவைப்பூட்டி மாணவர்கள் உட்செல்ல - வெளியேற விடாது மட்டு. சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிர்வாகம் தடைவிதிப்பு

## தண்ணீர், மின்சாரத்தையும் நிறுத்தியுள்ளதாக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்







(கனகராசா சரவணன்))

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்தில் விடுதிகளிலுள்ள மாணவர்களை வெளியே போகவிடாமலும் வெளியிலிருந்து மாணவர்கள் வளாகத்திற்குள் உள்நுழையாமலும் வாசல் கதவை நிர்வாகம் நேற்று (02) காலை 9 மணிக்கு பூட்டியதுடன், விடுதியில் தண்ணீர், மின்சாரத்தை தடை செய்துள்ளதையடுத்து, நீதிகோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் கடந்த 29ஆம் திகதி இரு மாணவர்களை விரிவுரையாளர் தாக்கிய சம்பவத்தையடுத்து, அங்கு விரிவுரையா ளரை தடுத்துவைத்து மாணவர்கள் நீதிகோரிபோராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் குறித்த பிரச்சினை தொடர்பாக ஒருவாரத்தில் தீர்வு பெற்றுத்தரப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் உறுதிமொழி வழங்கியதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் (01) இரவு 12 மணியளவில் கடிதம் ஒன்று கிடைக்கப்பெற்றது. அதில் உடனடியாக மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேறவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மாணவர்கள் உடனடியாக வெளியேறமுடியாத சூழல் இருக்கின்றது. பொருளாதாரப் பிரச்சினை உட்பட வாகனப் பிரச்சினைகள் இருக்கின்றன.

இதனால் மாணவர்கள் வந்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக நேற்றுக் காலை கூடி சுமுகமான தீர்வை பெற்றுக்கொள்ள தீர்மானித்த நேரத்தில் இந்த வாசல்கதவை பூட்டி இந்த அராஜக செயற்பாடுகளில் நிர்வாகம் ஈடுபட்டுள்ளதை மிகவும் கண்டிக்கின்றோம்.

அதேவேளை, விடுதியில் மின்சாரம், தண்ணீர் போன்றவற்றை நிறுத்தியுள்ளதுடன் உள்ளே உள்ள மாணவர்கள் வெளியில் செல்ல முடியாது, வெளியிலுள்ள மாணவர்கள் உட்செல்ல முடியாது கதவைப் பூட்டியுள்ளனர். இதனால் உணவைப் பெற்று உண்ணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிர்வாகத்தின் அராஜகம் கண்டிக்கப்படுவதுடன், ஒவ்வொரு மாணவர்களுக்கும் நீதியை நிர்வாகம் பெற்றுத்தர வேண்டும் என மாணவர் சங்கத் தலைவர் வி.சுரேந்திரன் கோரிக்கை விடுத்தார். இதேவேளை, மாணவர்கள் தொடர்ந்து நிர்வாகத்துக்கு எதிராக கோஷம் எழுப்பியவாறு பூட்டிய கதவின் முன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

# மட்டக்களப்பு சீரடி சாய்பாபா அறப்பணி மன்றத்தினால் 120 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் அமைந்துள்ள சீரடி சாய்பாபா அறப்பணி மன்றத்தினர் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு (வவுணதீவு) பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சொறுவாமுனை மற்றும் விளாவட்டுவான் ஆகிய கிராமங்களிலுள்ள 120 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

தற்போது பொருளாதார நெருக்கடியால் கிராமப்புறங்களைச் சேர்ந்த வறிய மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னலுறும் மக்களை இனங்கண்டு மட்டக்களப்பு சீரடி சாய்பாபா அறப்பணி மன்றத்தின் ஸ்தாபகர் மயில்வாகனம் யோகவேலின் நிதியுதவியின்கீழ் முதற்கட்டாமாக தெரிவு செய்யப்பட்ட வவுணதீவு சொறுவாமுனை கிராமத்தில் 40 குடும்பங்களுக்கும் விளாவட்டுவான் கிராமத்தில் 80 குடும்பங்களுமாக 120 குடும்பங்களுக்கு சீரடி சாய்பாபா அறப்பணி மன்றத்தின் இணைப்பாளர்களான லோ.தீபாகரன், நே.பிருந்தாபன் தலைமையில் உலருணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் செ.சண்முகராஜா, விளாவட்டுவான் கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் திலீபன், செயலாளர் தயாரூபன், சமூக ஆர்வலரும், அதிபருமான கோபாலபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



***வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் எண்டத மீண்டும் மேதினத்து அன்று கிளிநொச்சியிலும், மட்டக்களப்பிலயும் தமிழ்தேசிய கூட்டமைப்பு வலியுறுத்தி இருக்காங்க எலுவா சிங்கள சனம் இத ஏற்றாலும் காவிக்கார ஆசாமிகளும் இனவாத ஆட்சியாளர்களுக்கும் இனியாவது உணர்ந்து ஒரு தீர்வ வழங்கினால் கொஞ்சமாவது நாட்டு வங்கிறோத்த இல்லாம செய்யலாம் இல்ல எண்ட. மாங்காத்தீவுக்கு இனி சங்குதான் !***

# கிண்ணியா நகர சபை தவிசாளரின் ஈதுல் பித்ர் வாழ்த்துச் செய்தி



(சீனக்குடா நிருபர்)

மனித அவலங்கள் நீங்கி, சமூகங்களுக்கிடையே சக வாழ்வையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தி, நிலையான சுபீட்சத்தை அடைந்துகொள்வதற்கு தியாகத்தோடு செயல்படுவோம் - என கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம்.நிவாஸ் தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இம்முறை 30 நோன்புகளை நோற்பதற்கு இறைவன் எமக்கு சந்தர்ப்பத்தை தந்து, மேலும் நன்மைகளைத் தேடிக்கொள்வதற்கு அருள்பாலித்த எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக!

ரமழான் மாதத்தில் நோன்பு எந்த நோக்கத்திற்காக எமக்கு கடமையாக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை அடைந்து, நமது வாழ்நாள் பூராகவும் அதன் பலாபலன்களை பாதுகாத்துக் கொள்வதற்கு முயல்வோமாக!

நோன்பு நோற்பதன் மூலமாக அன்பு, ஆழ்பரிவு, இறை நம்பிக்கை, உளத்தூய்மை ஆகிய நற்பண்புகளை ஒருவர் பெற்றுக்கொள்கின்றார். இன்று எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடியினால் மக்கள் சொல்லொணாத் துயரங்களை தினமும் சந்தித்துக்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், நாட்டுமக்கள் அனைவரினதும் கஷ்டங்களும் துயரங்களும் நீங்க இறைவனிடம் பிரார்த்திப்போமாக!

இந்த இக்கட்டான நிலையில், தேசத்துக்கு விசுவாசமானவர்களாக நடந்துகொள்வதோடு, எல்லா சந்தர்ப்பங்களிலும் ஏனைய சமூகங்களுக்கு ஒரு முன்மாதிரியான சமூகமாக இருந்து நாட்டில் இன ஐக்கியத்திற்கும் சமாதானத்துக்கும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட இந்த நன்னாளில் திட உறுதிபூணுவோம் - என்று தனது வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வைத்தியர் முரளீஸ்வரனின் 'ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள்' நூல் வெளியீட்டு விழா





(வெல்லாவெளி நிருபர்)

வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரனின் 'ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள்' கவிதை நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட ஏற்பாட்டில், வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரனின் "ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள்" கவிதை நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (30) காலை 9.30 மணியளவில் மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச்சங்க கட்டடத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு முன்னிலையாக கிழக்குப் பல்கலைக்கழக முன்னால் மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் செ.யோகராசாவும், முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை-கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வே.விவேகானந்தராஜா ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

வைத்தியகலாநிதி இரா.முரளீஸ்வரன் ஒரு சிறந்த மருத்துவ நிருவாகி மட்டுமல்லாமல் ஓர் உன்னத இலக்கியப்படைப்பாளியாக திகழ்ந்தார். 1976இல் யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்த இவர், 1985ஆம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பில் வாழ்ந்து தனது கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், மருத்துவ பட்டப்படிப்பை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் மருத்துவ நிர்வாக முதுமானியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் சிறப்பாக முடித்து, மக்களுக்கு தன்னாலான மருத்துவசேவை செய்து மக்கள் மனதை வென்றெடுத்துள்ள வைத்தியர் என்பதை யாரும் மறக்கமுடியாது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தனது முதலாவது மருத்துவப்பணியை 2005ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி 2013ஆம் ஆண்டு கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகி தற்போதுவரை அங்கு தொடர்ந்து பணிபுரிகின்றார். மருத்துவ அனுபவங்களும், கவிதை அனுபவமும் இணைந்த மருத்துவமனை நாட்களைப் பற்றிய கவிதைகள் சேர்ந்த கவிதைத் தொகுப்பாக இந்நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி கலாரஞ்சனி கணேசலிங்கம், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.கு.சுகுணன் மற்றும் வர்த்தகர்கள், இலக்கியவாதிகள், படைப்பாளிகள், உயரதிகாரிகள், வைத்திய கலாநிதிகள், விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், மதத்தலைவர்கள், பொதுமக்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டார்கள்.

இந்நூலின் முதல்பிரதியை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க பொருளாளர் தேசபந்து மு.செல்வராசா பெற்றுக்கொண்டதுடன், நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் நூல்கள் கௌரவமாக வழங்கப்பட்டன.

கதிரவன் கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் த.இன்பராசாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி மு.கணேசராசாவினால் வரவேற்புரையும், கலைக்கோகிலம் நாட்டியப் பள்ளியினால் வரவேற்பு நடனமும் இடம்பெற்றன.

மேலும் தலைமையுரை, நூலாசிரியர் அறிமுகவுரையினைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. இதன்போது நூலாசிரியருக்கும், அவரது பாரியாருக்கும் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தாலும், அவருடைய நண்பர்களினாலும் பாராட்டுப்பத்திரம் வாசித்து பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டனர்.

# குறைந்த ஊழியர்களைக்கொண்டு சிறப்பாக இயங்கிய கல்முனை பொதுச் சந்தை இன்று வெறிச்சோடி காணப்படுகிறது

## மே தினத்தில் வர்த்தக சங்க செயலாளர் கவலை




(அம்பாறை நிருபர்)

தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் மிக விமரிசையாகக் கொண்டாடிக்கொண்டிருக்கின்ற நிலையில், எங்கள் நாட்டிலுள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளனர். எனவே, நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலை கருத்திற்கொண்டு ஒற்றுமையாக அனைவரும் தீர்வொன்றைப் பெற போராடவேண்டும் - என கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க செயலாளர் ஏ.எல்.கபீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்க அலுவலகத்தில் சர்வதேச தொழிலாளர் தினம் மற்றும் மக்கள் போராட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் (01) மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

சர்வதேச தொழிலாளர் தினத்தை தற்போது உலகம் பூராகவும் அனுஷ்டிக்கின்ற நிலையில் எமது நாட்டின் தற்போதைய நிலைமையினால் அத்தினத்தை மிக விமர்சையாக கொண்டாட முடியாததனால் நாம் கவலையடைகின்றோம். அந்தவகையில் எமது நாட்டின் பொருளாதார சிக்கல் மற்றும் ஸ்திரமற்ற அரசாங்கம் இதுபோன்ற பல சிக்கல்களுக்கு மத்தியில் இந்த ஊழியர் தினத்தை அனுஷ்டிக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு இந்த நாட்டுமக்கள் தள்ளப்பட்டுள்ள நிலையை பார்க்கின்றபோது மிக வேதனையாக உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நாட்டிலுள்ள ஊழியர்களின் நலனில் அக்கறை கொள்ளவேண்டும். தற்போதைய வாழ்க்கைச்செலவு ஊழியர்கள் மத்தியில் சிரமங்களை கொடுக்கின்றது. கல்முனை பொதுச்சந்தையானது குறைந்த ஊழியர்களைக்கொண்டு சிறப்பாக இயங்கிய ஒரு சந்தையாகும். இன்று இச்சந்தை வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

எவ்வித வியாபாரங்களும் இல்லாமல் தொழிலாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்த தொழிலாளர் தினத்தை ஏனைய நாடுகள் மிக விமரிசையாகக் கொண்டாடிக்கொண்டு இருக்கின்ற நிலையில், எங்கள் நாட்டிலுள்ள ஊழியர்கள் மிகவும் வறுமையில் உள்ளார்கள். எனவே, நாட்டின் தற்போதைய அசாதாரண சூழலை கருத்திற்கொண்டு ஒற்றுமையாக அனைவரும் தீர்வொன்றைப் பெற போராட வேண்டும்.

காலிமுகத்திடலில் கடந்த 20 நாட்களுக்கு மேலாக இரவு - பகல் பாராது மழை - வெயில் என இல்லாமல் அம்மக்கள் போராட்டத்தில் படுகின்ற கஷ்டங்களை பார்க்க முடியாமல் இருக்கின்றது. ஆகவே, ஜனாதிபதி, பிரதமர் இந்த நாட்டின் ஊழியர்களின் நிலைமைகளை கவனத்திற்கொண்டு இந்த நாட்டிலுள்ள சகல பொருளாதாரப் பிரச்சினைகளை சீர்செய்ய ஏனைய கட்சிகளுடன் இணைந்து தீர்வொன்றினை பெற்றுத்தர வேண்டும் - என கல்முனை பொதுச்சந்தையிலிருந்து மிக வினயமாக கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன், எதிர்காலத்தில் புதிய அரசாங்கம் அமைய வேண்டுமென எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றோம். சிங்களம், தமிழ், முஸ்லிம் என்றில்லாமல் இலங்கை மக்களென தற்போது ஒற்றுமையுடன் ஊழியர்கள் சகலரும் செயற்படுகின்றனர். கடந்த காலத்தில் கல்முனை பொதுச்சந்தையும் இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தமையும் சகலரும் அறிந்த விடயமாகும். எமது கல்முனை பொதுச்சந்தையில் சுமார் 300இற்கும் அதிகமான கூலித் தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். இந்த கூலித் தொழிலாளர்களின் நிலைமையை நாங்கள் கருத்திற்கொண்டு கொரோனா காலகட்டத்தில் எமது வர்த்தக சங்கத்தினால் ஒரு சிறு கொடுப்பனவை வழங்கியிருந்தோம். அது மாத்திரமன்றி, கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் எங்கள் சந்தையிலுள்ள மூடை தூக்கும் தொழிலாளர்களுக்கு சீருடைகளை வழங்கியிருந்தோம்.

எமது சகோதரர்கள் போன்று அவ்வூழியர்களை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இந்த ஒற்றுமையான நிலைமை கல்முனை பொதுச்சந்தையில் மட்டுமல்லாது, நாடுபூராகவும் நிலவ வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றோம். எனவேதான் அனைத்து ஊழியர்களும் நிம்மதியாக வாழ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன் - என்றார்.

மேலும், இச்செய்தியாளர் சந்திப்பில் கல்முனை பொதுச்சந்தை வர்த்தக சங்கத் தலைவர் ஏ.பி.ஜமால்டீன் ஹாஜி மற்றும் பொருளாளர் ஐ.எல்.எம்.யூசுப் ஆகியோர் இணைந்திருந்தனர்.

# உலக செய்திகள்

# இலங்கைக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்க தமிழக அரசுக்கு இந்திய மத்திய அரசு அனுமதி

## ஸ்டாலினுக்கு ஜெய்ஷங்கர் கடிதம்

இலங்கை மக்களுக்கு தமிழகத்தின் சார்பில் அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப அனுமதியளித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்நிலையில், ''இலங்கை மக்களுக்கு உதவும் தமிழகத்தின் கோரிக்கையை ஏற்ற வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷசங்கருக்கு நன்றி. மனிதாபிமான செயல் அனைவராலும் பெரிதும் வரவேற்கப்படும்'' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் இலங்கை மக்களுக்கு உதவும் வகையில் முதற்கட்டமாக அரிசி, மருந்து, பால்மா என ரூ.123 கோடிக்கு அத்தியாவசியப் பொருட்களை இலங்கைக்கு அனுப்ப அனுமதியளிக்கக் கோரிய தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக



நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், தமிழகத்தின் உதவிக்கு அனுமதியளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

இலங்கை மக்களுக்கு தமிழக அரசின் மனிதாபிமான உதவிகள் குறித்து நாங்கள் இலங்கை அரசை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் வாயிலாக தொடர்புகொண்டபோது நாடுகளுக்கு இடையிலான உதவிகள் அடிப்படையில் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள சம்மதித்தது. இதையடுத்து, நிவாரணப் பொருட்கள் குறித்த விவரங்களை மத்திய அரசுக்கு தெரிவிக்கும்படி கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி தமிழக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, தாங்கள் தலைமைச் செயலருக்கு அறிவுறுத்தி, மத்திய அரசுடன் இணைந்து இலங்கை மக்களுக்குத் தேவையான நிவாரணப்பொருட்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்.


- இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ஈக்வடோரில் வன்முறை: அவசரநிலை பிரகடனம்



ஈக்வடோரில் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களால் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதையடுத்து, அந்த நாட்டில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு நடவடிக்கைகளில் இராணுவத்தை ஈடுபடுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வன்முறையைக் கட்டுப்படுத்த அவசரநிலையை இந்நாட்டு ஜனாதிபதி கீலெர்மோ லஸோ அமுல்படுத்தப்படுவது இது இரண்டாவது முறையாகும். ஏற்கனவே, கடந்த ஒக்டோபர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட அவசரநிலை சர்ச்சையை ஏற்படுத்தியது. அதையடுத்து, அவசரநிலை காலத்தை அதிகபட்சமாக 30 நாட்களுக்கு மேல் தொடரக்கூடாது என்று அரசியல் சாசன நீதிமன்றம் உத்தரவிட்டது.



உலகளாவிய ரீதியில் நேற்று நோன்புப் பெருநாள் கொண்டாப்பட்ட நிலையில் புனித மக்காவில் பெருந்திரளானோர் கூடி பெருநாள் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது....

## நடமாடும் தோட்டம்



டில்லியில் ஓட்டோ சாரதியொருவர் ஓட்டோவின் மேற்கூரையில் நடமாடும் தோட்டத்தை உருவாக்கியுள்ளார்.

மேற்கு டில்லியின் திமார்பூர் பகுதியைச் சேர்ந்த குமார் என்பவர் தனது ஓட்டோவின் மேற்கூரையில் அலங்கார மூங்கில், ரோஜா உள்ளிட்ட அலங்காரச் செடிகளையும், 25 வகையான காய்கறிச் செடிகளையும் நட்டு வளர்த்து வருகிறார்.

தனது தேவைக்கு காய்கறிகளை எடுத்துக் கொள்வதாகவும், அதேநேரம் ஓட்டோவில் வரும் பயணிகளை குளிர்ச்சியான சூழலில் வைத்திருக்க முடிவதாகவும் ஓட்டோ சாரதி தெரிவித்துள்ளார். தற்போது குமாரின் இந்த யுக்தி டில்லிவாசிகளிடையே பிரபலமடைந்து வருகிறது.

## உக்ரைனுக்கு ஆயுத உதவிகள்: பிரிட்டனுக்கு பதிலடி கொடுக்கப்படும்

### ரஷ்யா சூசகமாக எச்சரிக்கை

உக்ரைனுக்கு பிரித்தானியா ஆயுத உதவிகள் வழங்குவதற்கு பதிலடியாக அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்துவது தொடர்பாக ரஷ்யா சூசகமாக எச்சரித்துள்ளது.

இது குறித்து தெரிவித்த ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சு செய்தித் தொடர்பாளரான மரிய சாக்கரோவா, நேட்டோ நாடுகளின் இராணுவ இலக்குகளை தங்களால் தாக்க இயலும் என்றும், பிரித்தானியாவும் அதன் உறுப்பினர்தான் என்றும் தெரிவித்தார்.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை எம்.பிக்கள்



முன்னிலையில் ஜனாதிபதி புட்டின் உரையாற்றியபோது, தேவையான அனைத்து ஆயுதங்களும் உள்ளதாகவும், அதனை பயன்படுத்துவோம் என்றும் அணு ஆயுத தாக்குதலுக்கான சாத்தியங்கள் தொடர்பாக சூசகமாக தெரிவித்தார்.

ஏற்கனவே, அணு ஆயுதத் தாக்குதலே உண்மையான ஆபத்து என்றும் மூன்றாம் உலகப் போருக்கான ஆபத்து தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் லாவ்ரோவ் தெரிவித்திருந்தார்.

## மணிலாவில் குடியிருப்புப் பகுதியில் பயங்கரத் தீ: குழந்தைகள் உட்பட 8 பேர் பலி; 80 வீடுகள் நாசம்




பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் சிக்கி குழந்தைகள் உட்பட 8 பேர் உயிரிழந்தனர்.

மேலும் தீப்பிடித்த தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறியபோது சிலர் படுகாயமடைந்துள்ளனர். உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்த தீ விபத்தில் 80 வீடுகள்வரை எரிந்து நாசமாகியுள்ளன. தீயணைப்பு வீரர்கள் 2 மணி நேரமாக போராடி தீயை அணைத்தனர்.

கியூசான் நகரின் புறநகர்ப் பகுதியிலுள்ள பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தின் பரந்த வளாகத்திற்குள் நெரிசலான குடியிருப்புகள் அடங்கிய அந்தப் பகுதியில் முதலில் எங்கிருந்து தீப்பிடித்து பரவத்தொடங்கியது உட்பட விரிவான காரணிகளை அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

## காற்றின் வேகத்தால் குலுங்கிய விமானம்

### 12 பயணிகளுக்கு பலத்த காயம்




மும்பையிலிருந்து மேற்குவங்க மாநிலம் துர்காபூருக்குச் சென்ற ஸ்பைஸ் ஜெட் விமானம் காற்றின் வேகத்தில் குலுங்கியதில் 12 பயணிகள் பலத்த காயமடைந்துள்ளனர்.

மும்பையிலிருந்து புறப்பட்ட அந்த விமானம் வானில் பறந்தபோது காற்றின் வேகத்தில் குலுங்கியதில் பயணிகள் ஒருவர் மீது ஒருவர் மோதிக் கொண்டனர்.

இதில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் செய்யப்படுவதாகவும் ஸ்பைஸ் ஜெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சிக்காகோ உட்பட பல்வேறு இடங்களில் துப்பாக்கிச் சூடு: 8 பேர் பலி; 42 பேர் காயம்



அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு வன்முறை பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக, வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் ஆங்காங்கே துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் வழக்கமான நிகழ்வுகளாக மாறியுள்ளன.

இந்நிலையில், சிக்காகோ நகரின் தெற்கு Kilpatrick பகுதியிலுள்ள வீடொன்றில் 69 வயது முதியவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதேபோல், Brighton Park, South Indiana, North Kedzie Avenue, Humboldt Park உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், 42 பேர் காயமடைந்துள்ளனர்.

## உழைப்பாளர் தினத்தில் கழுதைகளுக்கு மரியாதை



பல்வேறு நாடுகளில் நேற்றுமுன்தினம் தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், மெக்சிக்கோவிலுள்ள மலை கிராமத்தில், கடினமாக உழைக்கும் காரணத்தால் கழுதைகளுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

ஒடும்பா என்ற அந்த கிராமத்தில், மக்கள் வறுமையால் வாகனங்களுக்கு மாற்றாக கழுதை வண்டிகளை பயன்படுத்தி வருகின்றனர். ஆண்டு முழுக்க தங்களுக்காக உழைக்கும் கழுதைகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக 60 ஆண்டுகளாக மே முதலாம் திகதி கழுதைகளுக்கு மரியாதை செலுத்தி வருகின்றனர்.

அதை முன்னிட்டு கழுதைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஆடை அலங்காரப் போட்டிகள் நடத்தப்பட்டன.

## அமெரிக்காவில் சுழன்றடித்த சூறாவளி: மூவர் பலி; 15 ஆயிரம் பேர் பரிதவிப்பு



அமெரிக்கா கான்சாஸ் மாகாணத்தில் சுழன்றடித்த சூறாவளிக் காற்று நூற்றுக்கணக்கான குடியிருப்புகளை உருக்குலைத்துள்ளது.

ஆண்டோவர் நகரை சுற்றிவளைத்து தாக்கிய சூறாவளியில் சிக்கி கல்லூரி மாணவர்கள் மூவர் உயிரிழந்தனர். 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மின்தடையால் இருளில் மூழ்கினர்.

மேலும் சூறாவாளிக் காற்றில் வீடுகள் உருக்குலைந்ததால்



ஆயிரக்கணக்கான மக்கள் முகாம்களில் தங்கும் அவலத்திற்கு தள்ளப்பட்டனர்.

சுழன்றடித்த காற்று குப்பைக் கூளங்களை சுழட்டி வாரி எடுத்துக்செல்லும் வீடியோ இணையத்தில் வேகமாக பரவி வருகிறது.

## மீண்டும் விஸ்வரூபமெடுக்கும் கொரோனா: 31வரை கௌதம புத்தா நகரில் 144 தடை

இந்தியாவில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதால் உத்தரப்பிரதேசத்தின் கௌதம புத்தா நகரில் எதிர்வரும் மே 31 வரை 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

டில்லி உள்ளிட்ட மாநிலங்களில் கடந்த சில தினங்களாக மீண்டும் கொரோனா பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இந்தியா முழுவதும் நேற்று 24 மணிநேரத்துள் புதிதாக 3,157 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதன்மூலம் மொத்த பாதிப்பு 4,30,82,345 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 19,500ஆகவுள்ளது.

அத்தோடு நேற்று ஒரேநாளில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், கொரோனா பரவல் அதிகரித்து வருவதன் காரணமாக உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ள கௌதம புத்தா நகரில் நேற்றுமுதல் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு எதிர்வரும் மே 31 வரை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நாட்களில் உயர் அதிகாரிகளின் அனுமதியின்றி எவரும் போராட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்த அனுமதி கிடையாது.

மேலும் பொது இடங்களில் பூஜை மற்றும் நமாஸ் செய்யவும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று கௌதம புத்தா நகர் காவல் ஆணையரகம் தெரிவித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் கௌதம புத்தா நகரில் கொரோனா பரவல் அதிகரித்ததைத் தொடர்ந்து உத்தரப்பிரதேச அரசு பொது இடங்களில் முகக்கவசம் அணிவதை கட்டாயமாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.